திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

ஊர் : 8   1—7—55 வெள்ளி   :   14 பக்கங்கள்   :   விலை 3 அணா   மலர் : 48

கவர்னர் சம்பளமும்

சர்க்கார் ஊழியர்களும்?

மனமிருந்தால் மார்க்கமும் புலப்படும்

சென்னை அரசாங்க அலுவலக ஊழியர் சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டுவிழா 26–6–55–ம் நாள் சென்னையில் நடைபெற்றபோது, அவ்விழாவிற்குத் தலைமை வகித்த சென்னை கவர்னர் அவர்கள், சென்னை அரசாங்க ஊழியர் சம்பள முறையில் உள்ள குறைகளை எடுத்துக் காட்டி அதைத் தீர்க்க வேண்டியது முக்கிய கடமை என்று குறிப்பிட்டிருக்கிறார். மேலும் அவர் பேசுகையில், "கவர்னருக்கும், நீதிபதிகளுக்கும் சட்டபூர்வமாகச் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதை அவர்கள் அவசியப்பட்டால், தாங்களாகவே குறைத்துக் கொள்ளலாமேயன்றி வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. ராஜ்யத்தின் நிதி நிலைமையைக் கவனித்தாலோ எனக்குக்கூட கவலையாய்த்தானிருக்கிறது. ஆனாலும் சர்க்கார் ஊழியர்களின் சம்பளம் உயர்த்தப்படத்தான் வேண்டும். இதற்கு என்ன செய்வதென்று யோசித்து வருகிறேன்" என்பதாகவும் பேசியிருக்கிறார்.

சுதந்திர ஆட்சியில் அதுவும் காங்கிரஸ்காரர்களே ஏகபோக ஆதிக்கத்தில் தர்பார் நடத்தும் இன்று கவர்னர் பதவி அவசியந்தானா! அப்படி அவசியப்படுவதாகவே இன்று ஆட்சி பீடத்திலிருப்போர் கருதினாலும் இன்றுள்ளதைப்போல (கவர்னர் சம்பளமும் செலவும்) ரூபாய் பத்து லட்சம் கொழுத்த ஊதியம் கொடுக்கப்பட வேண்டுமா! அவ்விதம் கொடுக்கப்பட வேண்டுமென்று சட்டத்தில் குறிக்கப்பட்டிருப்பினும் மனிதாபிமானத்தில் மிகவும் அக்கறை கொண்டவர் என்று புகழப்படும் நமது சென்னை கவர்னர் தாமாகவே முன்வந்து அக்கொழுத்த சம்பளச் செலவை நடுத்தரமாகவாகிலும் குறைத்துக் கொண்டு மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும் அதே சமயத்தில் சர்க்கார் ஊழியர்களின் நீண்டநாள் குறையை கவர்னர் அவர்களின் தாராள மனப்பான்மையால் தீர்க்கப்பட்டது என்ற எடுத்துக் காட்டுக்கும் ஆவன செய்யமுன்வரக்கூடாதா! என்ற கேள்விகளை திராவிட முன்னேற்றக் கழகம் நீண்ட நாட்களாக கவர்னருக்கும், ஆட்சிபீடத்திலுள்ள மற்றவர்களுக்கும் நினைவூட்டி வந்திருப்பதை அனைவரும் அறிவர்.

தமது சம்பளச் செலவை குறைத்துக் கொள்ள சட்டம் இடந்தரவில்லையென்று சொல்லும் கவர்னர்—அதே சமயத்தில் தாமாகவே குறைத்துக் கொண்டால் அதை எவரும் தடுப்பதற்கில்லை யென்பதையும் வெளிப்படை

4-ம் பக்கம்

வெண்ணுடை வேந்தர்

திராவிடத்திற்கு குடியேறிய (நூற்றுக்கு 3 பேர் விகிதமுள்ள) பார்ப்பன வகுப்பினர், உத்தியோகம், கல்வித்துறை, அரசியல் ஆதிக்கம் ஆகியவைகளில் வெள்ளையர் ஆட்சியின் உதவியால் அனுபவித்து வந்த "ஏகபோக மிராசை" முதன் முதலாகத் தட்டிக் கேட்ட தனிப்பெருந் தலைவர்—சிறப்பாக திராவிட இன மக்களுக்கும், குறிப்பாக பிற்படுத்தப்பட்ட—தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் பொதுவாக மனிதசமுதாயத்திற்கு நல்வாழ்வு வேண்டி அதற்கான வழிவகுத்துக் கொடுத்த வெண்ணுடை வேந்தர்—உழைப்பாளர்களின் உண்மைத் தோழர்—வெள்ளையர் ஆட்சி ஏஜெண்டின் (கவர்னரின்) ஆணவத்தைத் தகர்த்தெறியச் செய்த அரசியல் மேதை சர். பி. தியாகராயர் அவர்களின் நினைவு நாள் 30—6—55. அவர் அன்று வகுத்த கொள்கை இன்று ஆல்போல் வளர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகத்தான தொண்டினால் அக்கொள்கைகளில் சில பல வெற்றிகளும் பெற்றுள்ளன. மேலும் தொடர்ந்து பணியாற்றி திராவிடத்தை தலைநிமிர்ந்து வாழச் செய்வோமாக. தன்னலமற்ற அத்தலைவரின் நினைவு நாளில் நாம் கொள்ள வேண்டிய உறுதியும் இதுவே யாகும்.

இந்திய துணைக்கண்டத்தின் இருமகத்தான சக்திகள்

வடநாட்டிற்கு வாழ்வளித்தவர் காந்தியடிகள்.

திராவிடத்தைத் தட்டி எழுப்பியவர் தியாகராயர்.

சுவைத்துப் பாரீர்

டபிள்யூ பி.டி.எழிலன்

என்னென்ன விநோதம் பார்!

இந்தியாவில் பல பகுதிகளில் நிலவிடும் திருமண விநோதங்களைக் கேளுங்கள்.

நீலகிரி, கூர்க், நேப்பாளம் போன்ற பகுதிகளில் "திரௌபதைக் காலம்" நீடித்து வருகிறது! ஒரே தகப்பனுக்குப் பிறந்த பல பிள்ளைகளும், கூட்டாக ஒரே பெண்ணை மணந்து கொள்ளலாம்! பஞ்ச பாண்டவர்களைப்போல் வாழலாம்!

பஞ்சாப் பகுதியில் வாழும் ஒரு வகுப்பாருள், மணமகனாக வரும் வாலிபனை, மணமகளாகப் போகும் பெண், நல்லசவுக்கு கொண்டு அவ்வாலிபனை அடி, அடி யென்று சுமை அடி அடிக்க வேண்டும்! மணமகன் அடி தாங்காது, அடிக்கும் மணமகளிடம் அபயங் கேட்க வேண்டும்! அபயமளித்து அடித்தலை நிறுத்தியதும் மணமகளை, மணமகன் ஏழு முறை வலம் வரவேண்டும்! கடைசியில் அடிகொடுத்தப் பெண்ணை, அடிவாங்கிய வாலிபன், எட்டி நடுமுதுகைப் பார்த்து உதைக்க வேண்டும்! வாலிபனைத் தொடர்ந்து அங்கு கூடியுள்ளவர்களும் பெண்ணை உதைக்க வேண்டும்! இத்திருக் கூத்து முடிந்ததும், பெண், வாலிபனின் தோளைப் பிடித்துக் கட்டிக் கொள்வாள்! அதிலிருந்து அவர்களிருவரும் கணவன்—மனைவி!

குடகுப் பகுதியில், ஆணும், பெண்ணும் சேர்ந்துதான், ஒரே இடத்தில்தான், திருமணம் நடைபெற வேண்டும் என்ற முறையே கிடையாது! பிள்ளை வீட்டில், பிள்ளைக்கும், எத்தனை தூரத்தில் இருந்தாலும் பெண் வீட்டில், பெண்ணுக்கும் தனித் தனியே அலங்காரங்கள் செய்து, ஆலாத்தி எடுத்துக் கொண்டாடுவார்கள்! அன்றே இருவருக்கும் கலியாணம் ஆன மாதிரி! பிறகு வேறு நாளில்தான் இருவரும் சேருவார்கள்.

உத்தரப் பிரதேசத்து "நத்"துக்கள் என்னும் மலைச் சாதியினர், ஒரு பெண்ணை திருமணத்திற்கென்று ஒப்புக் கொள்வதற்கு முன், அவள் கற்புடையவள்தானோ? என்பதைச் சோதிப்பார்கள்! எப்படி? பெண்ணின் கையில் பனை ஓலை வைத்து, அதன் மீது, நெருப்பில் காய்ச்சிய இரும்பை வைக்க வேண்டும். பனைஓலை கருகி விட்டால் கற்பற்றவள்! மாற்ற மில்லையானால் கற்புள்ளவளாம்! பிறகுதான் திருமணம் நடக்குமாம்!

அஸ்ஸாம் பகுதி "கோரா" சாதியினர்களில் பெண்கள் வலிமை வாய்ந்தவர்களாம்! அப்பெண்களை மணக்கும் ஆண்கள்—பெண்ணுக்கு அடங்கி பெண்வீட்டிலேயே ஆண்டஞ்சிய காலத்தைக் கழிக்க வேண்டும்! அவ் வழக்கப்படி கணவனோடு மனைவி போக மாட்டாள். மாறாக அங்கே மனைவியோடு கணவன் ஓடவேண்டும்.

மிஸ் பனாமா!

மிஸ் சென்னை, மிஸ் கல்கத்தா, மிஸ் அமெரிக்கா, மிஸ் பனாமா, மிஸ் உலகம் என்பவை யெல்லாம் பெண்மணிகளின் அழகுப் போட்டி!

அழகுப் போட்டியா அது? வடித்தெடுத்த அநாகரிகச் செயல்! வெறுக்கத் தக்கச் செயல்! அறவே ஒழிக்க வேண்டிய சிறுமைச் செயல்!

இங்ஙனமாகிய எமது கூற்றை தற்கால வாலிபர்களென்போர் ஏற்க மறுப்பர். ஏன்? பெரியோர் எனப்படுவோருள் பலரும் ஒப்ப மறுப்பர். அதுதான் 'தற்கால நாகரிகம்'—என்றுகூட வாதிப்பர். எவர் எக்கண் கொண்டு நோக்கி அழகுப் போட்டி வரவேற்க வேண்டியதுதான் எனக் கொண்டாலும் யாம் மறுத்தே கூற இசைகிறோம். "ஒருவனது உடைகொண்டு அவனது இயல்பை அளந்துணரலாகும்" என்பது தமிழ்த் தென்றல் திரு. வி. க.வின் வாக்கு.

அழகுப் போட்டியில் பங்குபெறும் அணங்குகள் அணியும் ஆடைகளைப்பற்றி கூறத் தேவையில்லை.

மறைக்க வேண்டிய உடற்கூறுகளை மறைக்காது விடுத்து சற்றேறக்குறைய 'நிர்வாண'மாகக் காட்சி யளித்தலோ நாகரிகம்?

இப்போக்கு மேலை நாடுகளில் சகிக்கக் கூடியதாகலாம். ஆனால் இந்தியாவில், அதுவும் கற்பின் பிறப்பிடமாகியத் தமிழகத்தில், அழகுப் போட்டியின் பெயரால் 'நிர்வாணக் கோலமா"? அடுக்காது! அடுக்காது!!

இத்தகைப் போட்டியில் பங்கு பெறும் மகளிர்களின் இயல்பை என்னென்று கூறுவது? அவர்கள் அணியும் அரைகுறை ஆடையைக் கொண்டே அவர்களது இயல்பை அளந்துரைத்து விடலாமே!

நற்குலத்திலுதித்த நற்குடிப் பெண் அழகுப் போட்டியில் அடி எடுத்து வைக்க நாணுவளே! கூச்சமுறுவளே! கற்பை விலை கூறும் போக்காக எங்கே உருவெடுத்து விடுமோ என அஞ்சுவளே!

மாதர்க்கு இயற்கை அணிகலன்களாகத் துலங்கும் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகியவை எக்கதியாவது என்று எவரே அஞ்சாதொழிவர்?

பற்பல எண்ணங்களும், உணர்ச்சியுஞ் சூழப்பெற்ற ஆண்கள் கூட்ட மத்தியில், உடற்கூறுகளை அசைத்துக் காட்டி, திருப்பிக் காட்டி, குனிந்து காட்டி, நிமிர்ந்து பார்த்து, புன்முறுவல் பூக்கக் குலுங்கி காட்டி,—ஆ! ஆ! நினைக்கவுங் கூசுகிறதே! எழுதவும் கை ஓட மறுக்கிறதே!—அழகில் தேர்ந்தவள் அவளே எனப்பரிசு பெறுதல் ஒரு கேடா? அந்தோ! தமிழகமே! அந்தோ நாணமே! மடமே! அச்சமே! பயிர்ப்பே! இதுதானா கற்பின் இலக்கணம்?

குடும்ப ஒழுக்கத்தில், குலக்கட்டுப்பாட்டில், சமுதாய சீரமைப்பில் நாட்டங்கொண்டோர் எவரும் இவ்வழகுப் போட்டியை வெறுத்துக் கூறாமலில்லை.

எடுத்துக் காட்டிற்கு தலைப்பில் கூறிய மிஸ் பனாமாவை நோக்குவோம்.

பனாமா நகரத்தில் அழகுப் போட்டி ஒன்றைத் துவக்கினார்கள். பலபல பெண்மணிகள் பங்குபெறத் துடித்தார்கள். முன் வந்தார்கள். நீராடுகையில் ஒப்புக்கு ஒட்ட வைத்துக் கொள்ளும் விநோத உடைகளைத் தேடி ஓட முற்பட்டார்கள். உடலை எவ்வெவ்வகைகளில் வெளிப்படுத்தக் கூடுமோ அவ்வவ்வகைகளைக் கையாள இச்சையுற்றார்கள். முதற்பரிசு அடைய வேண்டுமே என்று வெறி பிடித்தவர்கள் ஏன்? முழுநிர்வாணமாகவே காட்சி யளித்து விட்டாலென்ன என்று கூட நினைத்திருப்பர் போலும்!

அழகு எங்கே இருக்கிறது? உடலிலா? அது உள்ளத்தில் என்பதை அவர்கள் கண்டார்களா? அப்படி நினைக்கத்தான் விடுகிறார்களா—அழகுப் போட்டியைத் துவக்குபவர்கள்? வெற்றி பெறுவோர்க்கு வாகையுண்டு! முடிசூட்டு விழா உண்டு! "பனாமா அழகி" என்ற பட்டமளிப்பு உண்டு!—என்றால் எவர்தான் நிதான புத்தியையும் இழவார்? கற்பை மாசுறும் வகை எவர்தான் கொண்டு செலுத்தமாட்டார்? என்னே மதியீனம்! என்னே மதியீனம்!!

அழகுப் போட்டியைக் காரசாரமாகக் கண்டித்தார் கத்தோலிக்க மடத்துப் பாதிரி ஒருவர்.

கற்பின் கண்யத்தையும், மக்களின் மாண்பையும், நாட்டின் நலனையும் முன் நிறுத்தி, சுற்றறிக்கை வடிவில், ஓர் வேண்டுகோளை விடுத்தார் அப்பாதிரி.

அழகுப் போட்டி அஞ்ஞானத்தை வளர்க்கும்! அற்ப உணர்ச்சிகளைக் கிண்டிவிட்டு கற்பைக் குலைக்கும்! நாகரீகத்தை நாசப்படுத்தும்! நாட்டை நலிவுறச் செய்யும்! மக்களை ஒழுங்கீனர்களாக்கும்! எனவே ஒழியுங்கள் அழகுப் போட்டியை! ஆழக்குழி தோண்டிப் புதையுங்கள் அதை! தலை தெறிக்க விரட்டுங்கள் அதனை! என்று அதட்டினார்; அறிவுரை பகன்றார்; அன்புடன் வேண்டினார்—அழகுப் போட்டிக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பாதிரி.

அவரது விண்ணப்பம் வீண் போகவில்லை. கெடுபிடியோடு கிளம்பிய அப்போட்டி அடியோடு கைவிடப்பட்டது! போட்டியில் கலந்த மாதர்களனைவரும் பின் வாங்கிக் கொண்டார்கள்! அழகை விலைகூற வந்த ஆரணங்குகள் பாதிரி வேண்டுகோளுக்குத் தலைவணங்கினார்கள்!

பனாமா நகரத்து மக்கள், நன் மக்களானார்கள்! நாகரிகத்தைக் கட்டி வளர்ப்பவர்களும் ஆனார்கள்!

இதை உலகமே பின்பற்ற வேண்டும் அழகுப் போட்டியை அழித் தொழித்தே தீரவேண்டும்!— என்பது எமது அவாவாகும்!

தெரிந்து கொள்வோம்!

ஸ்டாலின் கிராட்:—ருஷ்யத் தளபதி மார்ஷல் ஜோசஃப் ஸ்டாலின் அவர்களின் பெயரைத் தாங்கி நிற்கும் நகரம். 1925 வரை, அது ஜாரிசைன் (Tsaritsyn) என்றுதான் அழைக்கப்பட்டு வந்தது. அவ்வாறேதான் பழைய உலக சித்திர (Atlas) ஏட்டிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது—(49--ON : 44 -30 E) வால்கா நதிக்கரையில் எழுந்துள்ள பயிர்த்தொழில் பகுதியில், இதுவொன்றே தொழில் துறை இயந்திரச் சாலைகள் உள்ள நகரம்.

நாஜிகளின் கடுமையான தாக்குதலை, வீரத்துடன் அறுபத்தாறு (66) நாட்களாக (அதாவது செப்டம்பர் 14-லிலிருந்து—நவம்பர் 19, 1942 வரை) கடந்த இரண்டாம் உலகப் போரில் எதிர்த்து வெற்றிக் கொடி நாட்டிய நகரம், ஸ்டாலின்கிராடு தான்! அவ்வெற்றியைப் போற்றுவான் வேண்டி, காலஞ் சென்ற ஐந்தாம் ஜியார்ஜ் சக்ரவர்த்தி 'போர்வாள்' ஒன்றை அந்நகரத்திற்குப் பரிசாக அளித்தார்.

*

அலுஷ்டா;—ருஷ்யாவில் கருங்கடலோரத்தில் இயற்கை எழிலுடன் காட்சி யளிக்கும் ஓர் ஊர். அது அப்பகுதிக்குக் கிடைத்தற்கரிய அருமை வாய்ந்த வாசஸ்தலம்.

"ஜனசக்தி"யின் புதிய குழப்பம்!

*12-6-55 ஜனசக்தி இதழில் **'மானத்தை காக்கப் போராடுபவர் யார்'** என்ற கேள்வியைக் கேட்டு தோழர் மாயாண்டியார் "ஈட்டி முனையை" தன்மீதே திருப்பிக் காட்டி நாட்டிய மாடுகிறார்!*

*"மானம் பெரிதா சோறுபெரிதா என்ற மானங்கெட்ட கேள்வியைக் கிளப்பியவர்கள் கம்யூனிஸ்டுகள் அல்ல. என்ற ஒரு புதிர் போட்டு" **மானத்தை விடு சோற்றை எடு என்று எந்தக் கம்யூனிஸ்டும் பேசவில்லை—எழுதவில்லை**, என்று மாயாண்டி என்னும் அந்த விசித்திர மனிதர் ஜனசக்தியில் எழுதி பெருமை கொண்டிருக்கிறார்!*

*உண்மையிலேயே தமிழக கம்யூனிஸ்டுகள் தன்மானத்தை உணர்வது உண்மையானால் தென்னாட்டு மக்களை, தமிழர் குலத்தை நேரு பண்டிதர் **"காட்டு மிராண்டிகள்"** எனத் தூற்றிய போது... தமிழ்ச் சீமையின் மானம் பறிக்கப்படும் நிலையில் கல்லக்குடி **"டால்மியாபுரம்"** என்ற பெயரைத் தாங்கி நிற்கிறபோது...நம் தமிழ் மொழியை, வீழ்த்த ஆதிக்க புரியினர் **"கட்டாய இந்தி"** கொண்டு வந்த வேளையில்... புகுந்த இந்தியை விந்தியத்திற்கு அப்பால் விரட்ட திராவிட இயக்கத்தினர் போராட்டம்நடத்திஆயிரத்திற்கு மேற்பட்டோர் சிறைக் கொடுமைகளுக்கு ஆளாகியும் தாளமுத்து நடராசன் ஆகிய இரு வீரர்கள் உயிரை ஆச்சாரியார் ஆட்சி பலி கொண்ட வேளையில்...புதுக் கல்வித் திட்டத்தைக் கண்டித்து தமிழ் மக்கள் போர்க்கொடி தூக்கிய நேரத்தில்...ஐந்தாண்டுத் திட்டத்தால், தென்னாட்டுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்பதை நாட்டு மக்களுக்கு உணர்ந்த தி. மு. கழகம் கண்டனம் தெரிவித்தபோது...... ஜனசக்தியில் ஏதோ இரண்டு வரிமட்டும் எழுதிவிட்டு வாய்மூடி மௌனிகளாக யிருந்திருப்பார்களா? திராவிடத்தின் மானம் காக்க இந்தக் கம்யூனிஸ்டுகள் செய்தது என்ன? ஓட்டெடுப்பின் போது ஒளிந்துகொண்ட வித்தை தெரியாதா?*

அதுமட்டுமா இந்த கம்யூனிஸ்டுகள் திருக்குறளுக்குச் சொந்தக்காரனையும் துளசிதாஸ் ராமாயணம் எழுதுபவனையும் ஒன்று சேர்த்து வடக்காவது தெற்காவது என பேசித் தீர்க்கிறார்கள்.

நாம் இந்திய சர்க்காருக்கு வரி கொடுக்கிறோம். தேசீயத் திட்டக் கடன் என்ற பெயரால் கடனும் கொடுக்கிறோம். மற்றும் எல்லா நிதிகளும் கொடுக்கிறோம். கொடுத்தும் நமக்கு இந்த கரிகால் பெருவளத்தான் சீமைக்கு என்ன நல்வாழ்வு கிடைத்துள்ளது' எனவேதான் தி. மு. கழகம் திராவிட நாடு திராவிடர்க்கே என்று முழங்குகிறது.

திராவிடத்தைப்பற்றிய மானத்தை கம்யூனிஸ்ட்டுகள் உணர்ந்திருந்தால் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்றல்லவா முழங்க வேண்டும். செய்தார்களா?

இன்னும் கூறுவோம், நெசவாளர் துயர் தீர்க்க தி. மு. கழகம் தீவிரத் தொண்டில் ஈடுபட்டபோது—இந்த கம்யூனிஸ்டுகள் துணியை விற்றால் சோறுவருமா என்று முணுமுணுத்தனர்!

தமிழர்களின் மானம் காக்கும் டால்மியாபுர பெயர் மாற்ற போராட்டத்தின்போது இந்த 'அகில உலக மேதைகள்' சோறு போடுமா இப்போராட்டம் என்று வினவினர். இப்பொழுது மாயாண்டியார் எழுதுகிறார் யார் அப்படி சொன்னது என்று. மானத்தைப் பற்றியே கம்யூனிஸ்டுகளுக்கு குளறுபடியாய் இருக்கும் பொழுது முன்னுக்குப் பின் எழுதுவதைப் பற்றியா கம்யூனிஸ்டுகள் வருந்தப் போகிறார்கள்!

மாயாண்டியாரே. கேளும் 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற பிரச்னையின் அடிப்படையில் நடத்தும் போராட்டம்தான் 'பொதுஜனப் போராட்டம்'. திராவிட நாட்டு மக்கள் அனைவரின் நல்வாழ்வுக்காக நடைபெறும் போராட்டம். எனவே அதுதான் மக்கள் போராட்டம்.

மானத்தைப்பற்றி பேசுகிற கம்யூனிஸ்டுகள் வடநாட்டு ஏகாதிபத்தியத்தால் சீரழிந்து வரும் திராவிடத்தின் மானம் காக்கும் திராவிட நாட்டுப் பிரிவினைக்கு இனியாவது பாடுபட முன்வரட்டும்.

ஸ்டாலின் சொல்லவில்லை! லெனின் எழுதவில்லை! என்ற குருட்டு அரசியல் பேச வேண்டாம்!

—முத்துப்பேட்டை ந. தர்மலிங்கம்

முத்தாரம்

மதங்களும், மத சம்பிரதாயங்களும், மக்களை ஏய்த்துப் பிழைப்பதற்காக, உருவாக்கப் பட்டவை என்பது எனது சொந்த அபிப்பிராயம். **—பாயி பரமானந்தர்**

நெற்றியில் 'நீறு, திருமண், சந்தனம், முதலியவைகளால் சாதிக் குறி இட்டுக் கொண்டு, பார்ப்பனர்களின் பாதங்களைக் கழுவிக் குடிக்கும் 'மூட' இந்துக்கள் இன்றும் காங்கிரசில் இருக்கிறார்கள்.

—ஜே. பி. கிருபளானி

பார்ப்பான் ஒரு நல்ல வேலைக்காரன்: ஆனால் கொடுமையான எசமானன். **சர். பி தியாகராயர்**

எலி, பன்னி, பெருச்சாளி, வானரும், பட்டரும், ததா இல்லிங்கில் மலையாளம் மனோகரம்.

—குஞ்சன் நம்பியார்

பல வந்தன பன ஸர்ப்பமு சால சீபல சேத சிக்கி சாவடே சுமதி. (பொருள் :— பாம்பையும் எறும்புக் கூட்டம் கொன்று விடும்) **தெலுங்கு பழமொழி**

பிறபெண்டிரைத் தொடாதே தொடத் தூண்டினால் உனது அன்னையை நினைத்துக் கொள்

—மாஹர் பாபா

சாதி நோயின் வேரை அறவே கல்ல வல்ல மருந்து கலப்பு மணமே என்பது என் முடிபு. **—திரு, வி, க.**

இறந்தவர்களின் துக்கம் கொண்டாடச் சிறந்த வழி எதுவெனின், இறந்தவர்களின் சொந்தமானவர்கள்பால் கவனஞ் செலுத்துதலே. **—எட்மண்ட் பர்க்**

சவக்குழி நாடும் வரைதானே ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம்? சவக்குழியில் பிணம் பிணந்தானே

—கார்க்கி

1975-ல் கட்டவேண்டிய கட்டிடத்திற்கு 1775-ல் செய்யப் பட்டச் செங்கற்களைத் தேடுவது மடமை.

—லூயி ஃபிஷர்

கோர்வை : 'டபிள்யு,'

அடர்ந்த காடுகளும், குத்துகுத்தாக எழும்பி நிற்கும் குன்றுகளும், நீலவான் நிகர்த்தக் கருங்கடலும், அதிலெழும் அலைகளின் ஆழகும் கண் கொள்ளாக் காட்சியாம்! கடலில் குளித்தலும், ஆரோக்கியக் கதிர்களை அள்ளி வீசும் சூரிய ஒளியில் உடலை உலர்த்துதலும் காடுகளின் ஓரம் உண்டி உண்ணுதலும், குன்றுகள் பக்கம் அலைந்து திரிதலும், கடலோரம் உலாவுவதும், மெய்மறந்து இன்புறும் நிலையாம்! அத்தகைய அலுஷ்டாவின் எழிலைப் பருகும் பாக்கியம் தோழர் நேருவுக்கும், அவர் தம் ருஷ்யப் பயணத்தின் போது, கிட்டியது!

*

***பிலிஸி (Tbilisi)** :—ருஷ்யாவில் ஜார்ஜியக் குடியரசின் தலைநகரம் பிலிஸி. ஜார் ஆட்சியின் போது இதை "டிஃபிலிஸ்" என்று மாற்றினார்கள். புரட்சிக்குப் பின் பழைய பெயரான 'பிலிஸி'யையே வைத்து வழங்கினார்கள். அப்பகுதியில்தான் தோழர் ஸ்டாலின் பிறந்தார். காகசஸ் மலைகளின் மத்தியில் கோரி (Gori) என்ற ஊர் உள்ளது: அங்கேதான் செருப்பு தைத்துப் பிழைத்து வந்த, கடுங் குடிகாரத் தந்தையாம் விஸாரியன் ஜோகஷ்விலிக்கும், காதரைன் அன்னைக்கும் டிசம்பர் 21, 1879-ம் ஆண்டு, மகனாகப் பிறந்தார். ஜோசஃப் அவர்தான் "எஃகு மனிதர்" ஸ்டாலின் ஆனார் பிறகு!*

பிலிஸியின் சீதோஷ்ண நிலை, வட இந்தியாவை ஒத்திருக்கிறதாம், குறிப்பாகக் கோடைகாலம் அங்கே அசல் இந்தியாவிலுள்ளதைப் போன்றுள்ளதாம். அந்த நகரத்தின் தோற்றமும் இந்தியாவை நினைவூட்டுகிறதாம்!

பனி உறைந்த மலைகளின் தோற்றம் இமாலய மலைச் சாரலை ஒத்து இருக்கிறதாம். இதிலிருந்து காணக் கிடப்பதெல்லாம் பிலிஸி காஷ்மீர் ஸ்ரீநகரைப் போன்றும் சிம்லாவைப் போன்றும், பஞ்சாப் தர்ம சாலாவைப் போன்றும் இருக்கும் போலிருக்கிறது.

*

***சாமர்கண்டு:** இந்தியாவிற்கு நானூறு மைல்களுக்கும் குறைவான கிட்டத்தில் உள்ள. ருஷ்யநாட்டு உசுபெக் குடியரசின் இரண்டாவது பெருநகரம், சரித்திரங்கொண்ட ஊர் அது—புராதன காலத்து நகரம். பல நூற்றாண்டுகளுக்கு முந்தி அங்கேதான், நாம் சரித்திரத்தில் படித்த தைமூர்லேன் ஆண்டான்! இந்தியா மீதும் படையெடுத்தான்! அங்கிருந்து பல புலவர்களும், அறிஞர்களும் இந்தியாவிற்கு வந்தார்கள்.*

சாமர்கண்டில், தைமூர்லேன் சமாதியும் அவரது பேரனின் அரண்மனையும், இன்னும் மற்ற மற்ற சரித்திர சாசனங்களும் காணக் கிடக்கின்றனவாம், பழைய காலத்து வானநிலை கணிப்புக் கூடமொன்றும் அங்கு உள்ளதாம்.

சாமர்கண்டிலிருந்து, தைமூர்லேன், பேபர் போன்ற முகலாயர்களின் படையெடுப்பினால் இந்தியாவின் சரித்திரமே மாற்றங் கண்டது.

இப்பகுதி மக்கள் இன்றும் இஸ்லாமியர்களாகத்தானிருக்கிறார்கள். ஆனால் புலதாரம், ஷரியத் முதலியவைகளான குருட்டு பழக்கவழக்கமெல்லாம் விரட்டப்பட்டன.

முல்லாக்களுக்கு இடமே கிடையாது அங்கே! அதாவது, மூடத்தனத்திற்கே முற்றுப்புள்ளி—என்பது அர்த்தம்!

அத்தகையச் சீர்திருத்தங்கள் அமலாக்கப்படாதிருந்தால் இன்று அந்த நகரம் சீரும் சிறப்பும் வாய்ந்த, பருத்தி கொழிக்கும் நகராக விளங்கி யிருக்க முடியாது என்று அந்நகர மக்களே ஐயந்திரிபற உணர்கின்றனர். உழைக்கின்றனர்! திருப்தியோடு வாழ்கின்றனர் மக்கள் அங்கே! எல்லோரும் அங்கே அந்நாட்டு மன்னர்கள்தான்!

கேள்வி? பதில்

அஞ்சாநெஞ்சன்

கே: காங்கிரசைச் சேர்ந்த திருமதி அனந்தநாயகியை தமிழ்நாட்டுப் பெண்களின் அவமானச் சின்னம் என்று காமூனிஸ்ட் கந்தசாமி (மனைவி) அவர்கள் பேசியிருப்பதாக தினத்தந்தி பத்திரிகையில் படித்தேன், ஒரு பெண்ணை இப்படி பேசுவது நியாயமாகுமா?

—எம். வீரப்பன், திருச்சி

ப : கம்யூனிஸ்ட் தலைவர் மனைவி கந்தசாமி அவர்கள் தோழியர் அனந்தநாயகியைப் பற்றி அவ்விதம் குறிப்பிட்டது உண்மையாயின் அது வருந்தக் கூடியதுதான். எனினும் தோழியர் அனந்தநாயகி அவர்களும் கூடுமானவரை பொறுப்புடன் பேசப் பழகுவதுதான் பொதுப்பணிக்கும் ஏற்றதாகும். பொதுவாழ்விலே கருத்து மாறுபாடும் கொள்கை வேறுபாடும் இருப்பது இயற்கையே. அதற்காக மாறுபட்ட கொள்கை கொண்டவர்களை அழித்துவிடுவோம், ஒழித்துவிடுவோம் என்று தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசுவது நியாயமல்லவே.

*

கே: அஞ்சா நெஞ்சரே 5—6—55 புதுவையில் அமைக்கப்பட்ட மக்கள் முன்னணியில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கலந்து கொண்டதின் கருத்தென்ன?

—சு. புரட்சிமாறன், ஆமதாபாத்

ப : தோழரே இக்கேள்வியைப் புரட்சிக் கவிஞரையோ அல்லது பரந்த கண்ணோட்டக்காரர்களையோ கேட்டிருக்க வேண்டும். அதுதான் முறையுங்கூட. எனவே புதுவை மக்கள் முன்னணியைக் குறித்தோ அதில் தொடர்பு கொண்டுள்ளவர்களைக் குறித்தோ தி. மு. கழக சார்பில் பொதுச்செயலாளரும், புதுவை தி. மு. கழகமும் வெளியிட்டுள்ள அறிக்கையைவிட நான் ஒன்றும் கூறுவதற்கில்லை.

*

கே: நேருஜியின் ரஷ்யா விஜயத்தால் இந்தியா பெருமை அடைந்தது என்கிறோம். நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா இல்லையா?

எஸ். ஆனந்தன், வடசென்னை

ப : தோழரே என்ன கேள்வியே மிரட்டல் பாணியில் இருக்கிறதே! நேரு பண்டிதரின் ரஷ்யப் பயணம் இந்தியாவுக்கு பெருமை தேடித் தந்திருக்கலாம். அதை ஓரளவு ஒப்புக்கொள்கிறேன். ஆனால் திராவிடத்துக்கு பெருமையில்லை யென்பதுடன் மக்களின் வறுமை தீருவதற்கும் நேரு பண்டிதரின் ரஷ்ய பயணத்தால் வழிவகையில்லை என்பதைத் தாங்கள் ஒப்புக்கொள்வீர்களா?

*

கே: மகாத்மா காந்திக்கு கிட்டத்தட்ட சமமாக தென்னாட்டில் யாரைச் சொல்லலாம்?

—எம். ரங்கநாதன், கோவை

ப : சர். பி. தியாகராயருக்குச் சமானமாக வடநாட்டிலே யாரைக் குறிப்பிடலாம். அதைச் சொல்லுங்கள் முதலில், பிறகு யான் உமது கேள்விக்குத் தக்க விடை அளிக்கிறேன்.

*

கே: ராஜாஜிக்கு இப்போது உடல் நிலை எப்படியிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?

—வி. கே. துயமணி, தென்சென்னை

ப: நானென்ன அவருக்கு டாக்டரா? எனினும் தங்கள் கேள்விக்குப் பொதுவான பதில் கூறுகிறேன், ஆச்சாரியாரின் பேரால் பத்திரிகைகளில் புதிய அறிக்கைகள் ஒன்றும் வெளிவராதவரை அவருக்கு உடல் நிலையில் கோளாறில்லை என்று ஒருவாறு தெரிந்து கொள்ளலாம்.

*

கே: வெள்ளையர் ஆட்சி வெளியேறியதில் நீதிக்கட்சிக்கும் திராவிட இயக்கத்திற்கும் தொடர்பே இல்லை யென்று சில காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள். இது உண்மையா!

—எ. கௌதமன், குற்றாலம்

ப : அவ்விதம் கூறும் காங்கிரஸ்காரர்கள் அரசியல் விவரம் அறியாத அப்பாவிகளாக இருக்கலாம். 1938-ம் ஆண்டின் சென்னை அரசியல் நிலையைச் சற்று அறிவுடைமையோடு படித்துப் பார்க்குமாறு அவர்களுக்கு கூறுங்கள் தோழரே

*

கே : திராவிடம் ஒரு கற்பனை கோஷம் என்று 'ஜனசக்தி' இகழ் கூறுகிறதே. இதுபற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

—முல்லைமலரன், இராசிபாளையம்

ப : கொள்ளைக் கண்ணனிடம் நல்ல பார்வையை எதிர்பார்க்க முடியாதல்லவா! அதுபோலவே திராவிட நாட்டுப் பிரிவினைக்கு 'ஜனசக்தி' யிடம் நேர்மையான ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதும் வீண் வேலையாகும் தோழரே.

*

கே: காமராஜ் சர்க்கார் நிலச் சீர்திருத்த சட்டம் கொண்டு வருகிறோம் என்று உறுதி கூறினார்கள். இப்போது அந்தப் பேச்சு பொய்க்கால் குதிரை போலாகிவிட்டது. இது பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

—சி. எம். ரத்தினம், பெரும்புதூர்

ப: நான் என்ன சொல்லுவது! காமராசர் சர்க்காரின் நிலையே பொய்க்கால் குதிரையாட்ட மாடலில் இருக்கும்போது அவராலும் மற்ற அமைச்சர்களாலும் கூறப்பட்ட நிலச்சீர்திருத்த பேச்சும் வாழையடிவாழையாகத்தானே இருக்க முடியும்.

*

சென்னை 4-வது வட்டம்

சென்னை 4-வது வட்ட தி. மு. கழக முன்னாள் துணைச் செயலாளர் தோழர் டி. இராசு அவர்களின் புதல்வன் தங்கச் செல்வன் 21—6—55-ம் நாள் காலமானது குறித்து 4-வது வட்ட தி. மு. கழகம் தனது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது என செயலாளர் சேதுராசன் அறிவிக்கிறார்.

மூளையிருக்கா?

●

வாடா! கபோதி! கண்டு பிடித்தாயாடா கடவுளை!

போடா மண்டு! கண்ணுக்குத் தென்படல்லையானால் கடவுள் இல்லை என்று அர்த்தமா? நேற்று மாலை 'கசாப்பு அய்யர்' வீடு சென்றிருந்தேன் அவரிடமிருந்து உனக்குச் சூடான பதில் கொண்டுவந்திருக்கிறேன்!

அட கபோதி! உனக்கென்று ஒரு சுயபுத்தி கிடையாதா? "கசாப்பு அய்யரி"டம் ஓடுவானேன்? போகட்டும், உனது சூடான பதிலைத்தான் சொல்லித் தொலை!

டேய் மண்டு! சொல்றேன் கேள்! உன்னுடைய மூளை உனக்குத் தெரியுதாடா? தெரியாது! அதனால் உனக்கு மூளையில்லை என்று அர்த்தம்?

கபோதி யென்றாலும், கடைந்தெடுத்தக் கபோதிடா நீ! உனக்கு இந்த அபூர்வப் பதிலைக் கொடுத்து உதவினாரே அந்த அய்யருக்கு மூளை யிருக்கான்னுதான் சந்தேகம்! போகட்டும் சமீபத்தில் காலமானாரே ஐன்ஸ்டீன்! கேள்விப்பட்டிருப்பியே! அவரது மூளையைத் தனியே எடுத்துப் பரிசோதனைக்கு அனுப்ப அவர் உயிரோடு இருக்கும்போதே சம்மதித்தார்! அப்போது அவருக்கு மூளையில்லேன்னு நினைச்சாரு? மற்றவர் கண்களுக்கு, வெட்டி யெடுக்காத முன்பு, நாம் உட்பட, அவருக்கு மூளையில்லேன்னு நினைப்பு? நம்பிக்கை? அட கபோதி! என் மூளையை நீ பார்க்கலாம்! உன் மூளையை நான் பார்க்கலாம்! எனவே கண்ணுக்கு எப்படியும், வேண்டுமானால், பட்டே தீரும் 'மூளை' என்ற உறுப்பு! கடவுள் அப்படியல்ல! உனது பதிலின் சூட்டுத்தனத்தைத் தொட்டுப் பார்த்தால் உனதும், உன்னுடைய "கசாப்பு ஐயரி"ன் குருட்டுத்தனமுந்தான். தெரியுது! மூளை உதாரணத்தை இழுத்து மூளை இழந்து பேசாதே போடா! கபோதி! போ!

மணிவண்ணா! உனது மூளையே மூளை! உனது அறிவு விளக்கத்தை அறியாது, இதுவரை நான் உன்னை மண்டு என்று சொன்னதற்காக புத்தி! புத்தி!! ஆயிரம் புத்தி!!! உண்மை உணர்த்திய மணிவண்ணா! நான் சென்று மீண்டும் பிறகு சந்திக்கிறேன்! என்னை மன்னிக்கவும்! நன்றி கலந்த வணக்கம்! வர்ரேன்!

உண்மை உணர்ந்திட்டக் கண்ணாயிரம் நீ இப்போது கபோதியல்ல அசல் கண்ணாயிரம்! சென்று வாடா கண்ணா!

டபிள்யூ. பி. டி. எழிலன்

கவர்னர் சம்பளம்... தொடர்ச்சி

யாகக் கூறியமைக்கு பாராட்டுகிறோம். நிற்க, சட்டம் இடந்தரவில்லை யென்பதற்காக காங்கிரசார் மற்ற காரியங்களுக்கு கைகட்டி வாய்பொத்தி இருந்ததில்லையே! இன்னும் சொல்லப்போனால் பொதுமக்களின் நியாயமான கிளர்ச்சிகளுக்கேற்ப சட்டம் தானாக வளைந்து கொடுத்த சம்பவங்கள் அரசியல் வரலாற்றிலே ஏராளமுண்டு. அதையும் சென்னை கவர்னர் அவர்கள் அறியாதவரல்ல. அதைவிட 'விசித்திரம் என்னவெனில் பொதுஜனக் கிளர்ச்சி' என்ற பேரால் நேர்மையற்ற கோரிக்கைகளுக்குக்கூட அரசியலாரின் சட்டம் குனிந்து கொடுத்ததை தேசியத்தில் ஊறிய சென்னை கவர்னரும் இந்தியக் குடியரசு ஆட்சி சட்டத்தை உருவாக்கிய நிபுணர்களும் அறியாததல்ல. எனவே சட்டத்தைக் காட்டி ஏழைகளின் வாழ்வை, உரிமையை தட்டிப் பறிக்கும் அசகாய சூரத்தனத்தில் சென்னை கவர்னர் ஆசையோ அல்லது நம்பிக்கையோ கொள்ள மாட்டார் என்று கருதுகிறோம். கவர்னர் சம்பளச் செலவு குறைப்பு பற்றிய பிரச்னையில் இருதயக் கோளாறுள்ளவர்களும் அல்லது 'மேல்மாடி' குழப்பத்திலுள்ளவர்களும் சட்டத்தை சுட்டிக் காட்டி அது முடியாத காரியம் எனக்கூறி தமது 'அபார புத்தி'யை வெளிப்படுத்திக் கொள்ளலாமேயன்றி கவர்னர் அவர்கள் அவ்வாறு சொல்ல மனமார ஒப்ப மாட்டார்.

எனவே சர்க்கார் ஊழியர்களின் ஊதிய உயர்வுப் பிரச்னையில் நிதி அமைச்சர் சுப்ரமண்யம் அவர்கள் பணமில்லையே என்று கைவிரித்து அகவல் பாடினாலும், கவர்னர் அவர்களாவது தாமாகவே தமது சம்பளச் செலவு ஆகியவைகளை சரிபாதியாகக் குறைத்துக் கொண்டு கூடுமானவரை அப்பணத்தின் மூலமும் அதுபோலவே மற்ற உயர்தர உத்தியோகஸ்தர்களின் சம்பளச் சிக்கன மூலம் சர்க்கார் ஊழியர்களின் சம்பளக் குறைவை நிறைவு படுத்த வேண்டும்.

மனமிருந்தால் மார்க்கமும் புலப்படும் என்பதைச் சென்னை கவர்னர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதுடன் நிதி அமைச்சர் மீது பழியைப் போட்டோ அல்லது சர்க்கார் ஊழியர்களின் குறைகளைப்பற்றி தேனொழுகப் பேசுவதில் மட்டுமோ காலம் கடத்தாமல் மேற்கூறிய வகையில் சென்னை கவர்னர் அவர்கள் ஆவன செய்ய முனைய வேண்டுகிறோம்.

தற்போதுள்ள ஆட்சிமுறைப்படி கவர்னர் பதவிகளுக்குக்கூட அவ்வளவு முக்கியத்துவம் ஒன்றுமில்லை என சென்னை கவர்னர் அவர்களே மேடைகளில் பேசியிருப்பதை இதுசமயம் அவருக்குப் பணிவன்புடன் நினைவூட்டுவதுடன் இதனை இந்திய அரசியலாரிடமும் வற்புறுத்துவார் என்று எதிர்பார்க்கிறோம்.

—நக்கீரன்

கன்னிவாடி

தாரை வட்டக் குழுவின் செயற்குழு கூட்டம் 22-6-55 மாலை 3 மணிக்கு மூலனூர் ரேடியோ நிலையக் கட்டிடத்தில் செயலாளர் ந. சின்னமுத்துசாமி தலைமையில் கூடியது. அதுபோது 30-5-55-ந்தேதி கன்னிவாடியில் நடைபெற்ற வட்டக்குழுவின் நன்கொடை வரவு செலவு சரிபார்க்கப்பட்டு வரவு ரூபாய் 556—15—0-ல், செலவு ரூபாய் 436—10—9 போக மீதியுள்ள ரூபாய் 120—4—3-ம் வட்டக்குழுவின் வளர்ச்சிக்கு பயன்படுத்துமாறும் மற்றும் பல தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

'திராவிடன்' சந்தா விவரம்

உள்நாடு

ஆண்டு சந்தா	... ரூ.	8	0	0
ஆறுமாதம்	... ரூ.	4	0	0
தனிப்பிரதி	... ரூ.	0	3	0

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

வணக்கம். ஜூன் முடிய பட்டியல் அனுப்பப்பட்டிருக்கிறது. உடன் அதற்கான தொகையைத் தவறாது அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

—நிர்வாகி 'திராவிடன்'

திராவிடன்

சென்னை : 1—7—55 : வெள்ளி

தில்லையும் : திருப்பதியும் !

ஜூலை 7-ம் நாளிலிருந்து தில்லை சபாநாயகர் கோயிலுக்கு ஐந்து லட்ச ரூபாயில் கும்பாபிஷேகம் செய்ய திட்டமிட்டிருக்கிறார்களாம்! இதனையொட்டி தெ. ஆ. மாவட்டத்திலுள்ள சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கூட விடுமுறை விடப்போவதாகவும் கூறப்படுகிறது.

சேதமடைந்துள்ள சபாநாயகரின் இருப்பிடத்தை செப்பனிடக் கூடாது என்று இதற்காக முயற்சி எடுத்துக் கொண்டுள்ள நிர்வாகிகளையோ அல்லது பக்தர்களையோ நாம் வற்புறுத்த விரும்பவில்லை. ஆனால் செப்பனிடும் பணிக்கு ஐந்து லட்ச ரூபாயும் மற்ற கூத்துகளும் தேவையா—அவசியந்தானா, நாடு இன்றுள்ள நிலையில் இக்காரியங்கள் அறிவுடைமைக்கு ஏற்றதுதானா என்பதே நமது கேள்வியாகும்.

கிருத்துவமத நிறுவனங்கள், தங்களின் மதத்தின் பேராலும், ஆண்டவனின் பேராலும் மருத்துவ விடுதிகள் கல்விச்சாலைகள், அனாதை விடுதிகள் என்று இப்படியாக நம் நாட்டிலே அறிவுக்கு ஏற்ற காரியங்களைச் செய்திருப்பதைப் பார்த்துங்கூட இந்து மதக் காப்பாளர்கள் இன்னும் தெளிவு பெறவில்லையெனில் அவர்களிடம் ஊறிப் போயிருக்கும் பழமை வெறி எத்தன்மையது என்பதை நாம் விவரிக்கவும் வேண்டுமோ?

மனித சமுதாய முன்னேற்றத்திற்கு கேடுபயக்கும் இந்த அநீதிகளை அறிவியக்கத்தார்—திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எடுத்துக் கூறினால், அவர்களை நாத்திகர்கள் என்று நாத்தழும்பேறி வசை புராணம் பாட இந்துமதக் காப்பாளர்கள் என்போர் துடிதுடிக்கின்றார்களேயன்றி தங்களின் கண்மூடி வழக்கங்களுக்காக வெட்கப்படவோ, திருந்தவோ உணர்வு பெற்றார்களில்லை.

இக்கூட்டத்தாரின் போக்குதான் இந்த லட்சணம் என்றால் மதச்சார்பற்ற சர்க்கார் என்று கூறிக் கொள்ளும் சுயராஜ்ய ஆட்சி முறையோ இவ்வித கண்மூடி வழக்கங்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகவே யிருக்கிறது.

சுயமரியாதை இயக்கப்பணி இந்நாட்டிலே தொடர்ந்து நடைபெறாதிருந்தால் வீதிக்கு வீதி பத்து கோயில்களும் இரண்டு மடங்களும் உழைக்காத உலுத்தர்களுக்கு ஒரு சத்திரமும் வலுக்கட்டாயமாக அல்லது ஆண்டவனின் பெயரைச் சொல்லி பயமுறுத்தி அமைக்கப்பட்டிருக்கும்.

ஆனால் பலவித தொல்லைகள், கொடுமைகள் இன்னும் சொல்லப்போனால் அரசியலாரின் ஜபர்தஸ்து ஆகியவைகளைச் சகித்துக் கொண்டு கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக அதாவது சுயமரியாதை இயக்கமும் அதனின் வளர்ச்சியாக, மகத்தான சக்தியாக இயங்கி வரும் திராவிட முன்னேற்றக் கழகமும் ஆற்றிவரும் அரும்பணியினால் இந்நாட்டிலே மதக் கிறுக்கர்களின் ஆதிக்கம் ஓரளவாவது ஒழிக்கப்பட்டு, கல்விச்சாலைகளும், மருத்துவ விடுதிகளும் நிறுவப்பட்டிருக்கின்றன என்பதை தென்னாட்டு அரசியல்குறிப்புகளே எடுத்துக்காட்டும். அவ்வித ஆக்கப்பணிக்கு அரசியலாரின் ஒத்துழைப்பு இருந்தால், கல்வித்துறைக்கு செலவழிக்க பணமில்லையே என்று ஆளவந்தார்கள் பெருமூச்சு விடும் அவலநிலை யிருக்காதே!

தில்லை சபாநாயகருக்கு நடக்க யிருக்கும் திருக்கூத்து மட்டும்தானா? மீனாட்சியம்மன், ரங்கநாதர், பார்த்தசாரதி, ஏழுமலையான், போன்ற பெரும் முதலாளிக் கடவுள்களிடமும், அந்தக் கடவுள்களைக் காப்பாற்றவே. மடம் அமைத்து எல்லா ஆசைகளையும் துறந்து ஈசன் திருவடி நிழலிலே கலந்து கொள்ள நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறோம் என்று கூறி முதலாளித்துவத்தைவிட மேனமினுக்கி வாழ்வு நடாத்தி வரும் மடத்தம்பிரான்கள், குருமார்கள் என்பவர்களின் முகாமில் ஆண்டவன் பேரால் மலிந்துள்ள கோடிக் கணக்கான பொருள்களும் நிலபுலன்களும் அரசியலாருக்குத் தெரியாததல்ல. இவைகளில் சரிபகுதியாவது மக்களின் கல்வித் துறைக்கும், ஏழை எளியவர்களின் வறுமையைத் தீர்க்கவும் ஆண்டவன் பேரிலாவது ஆவன செய்யக் கூடாதா என்று அறிவியக்கத்தார் கேட்டால் அதற்குப் பெயர் நாத்திகம் என்று கூப்பாடு போடப் படுகிறது.

இந்நிலையில் கோயில் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு ஏற்கனவே "வெங்கடேசப் பெருமாள்" பெயரில் பல்கலைக் கழகம் ஒன்றை பல லட்ச ரூபாய் செலவில் நடத்திவரும், திருமலை—திருப்பதி தேவஸ்தானம், இப்போது மருத்துவக் கல்லூரி ஒன்றை அமைக்க 50 லட்ச ரூபாய் தருவதாகத் தெரிவித்திருக்கிறது. இந்த அளவுக்கு மனவளம் பெற்ற அக்கோயில் நிர்வாகிகளை நாமும் மனமாரப் பாராட்டுகிறோம். இவர்களின் பணி, தில்லை சபாநாயகர், மீனாட்சியம்மன், ரங்கநாதர், பழனியாண்டவர் ஆகியவர்களைக் காப்பாற்றி வருபவர்களுக்கும். மடத் தம்பிரான்களுக்கும், ஒரு பாடமாக அமைந்து திருமலை—திருப்பதியார் பெற்ற அறிவான பெருநோக்கினைப் பெறுதல் வேண்டும் என்பதே நமது ஆசையாகும்.

நிற்க, நமது கழகம் சமுதாயத் துறையில் ஆற்றிவரும் பணியும் வீண்போகவில்லை. நமது கொள்கைகளை எதிர்த்தவர்களில் சிலராவது இன்று தெளிவு பெற்று வருவதைக் காண்கிறோம். நமது கொள்கை மகத்தானது — அறிவுடைமை கொண்டது. நாம் ஆற்றிவரும் பணி தூய்மையானது. எனவே நமது கொள்கை கோட்பாடுகள் வெற்றியுறத்தான் செய்யும். இதனைத்தான் திருப்பதி—தேவஸ்தானக் குழுவினரின் ஓரளவு மனமாற்றமும், மற்ற துறையில் ஏற்பட்டுவரும் மாறுதல்களும் எடுத்துக்காட்டுகின்றன.

தோழர் சிவம்

சிவம் என்ற பெயரில் நமது கழக ஏடுகளில் எழுதும் தோழர் வி. சிவப்பிரகாசம் சென்னை சட்டக் கல்லூரி முதல் ஆண்டு (எப். எல்.) தேர்வில் இரண்டாவது வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்கிறார் என்று அறிந்து மகிழ்கிறோம்.

அடுத்த வாரம்

* இரா. இளஞ்சேரன் தீட்டும் **பூங்கொத்துகள்** (இராதாமணாளன்)
* இலங்கைத் தோழரின் கடிதம்
* ரங்கூன் கப்பல் (அலிசேக் மன்சூர்)
* கூத்தரசன் மடல்
* கார்ட்டூன், கவிதை முதலியன 8-7-55 'திராவிடன்' இதழில் வெளிவரும்.

நடக்க இருப்பவை

சென்னை சர்க்கார் பஸ் தொழிலாளர் சங்கம்

2—7—55 சனி மாலை 5-30 மணிக்கு சென்னை நேப்பியர் பார்க்கில் சென்னை சர்க்கார் பஸ் போக்குவரத்து தொழிலாளர் சங்க சார்பில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், கே. டி. கே. தங்கமணி மற்றும் பலர் பேசுவர்.

சத்துவாச்சாரி தி. மு. கழகம்

3—7—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு வேலூர் அடுத்த சத்துவாச்சாரி பஞ்சாயத்து போர்ட் அருகாமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் வீராசாமி தலைமையில் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, வே. அ. இளஞ்செழியன், வே. சு. பாண்டியன், பேசுவர்.

திருச்சி மாவட்ட கழக செயற்குழு கூட்டம்

நாளது 3—7—55 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு துறையூர் தி. மு. கழக அலுவலகத்தில் மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெறும். அனைவரும் தவறாது வரவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: மாநில மாநாட்டு நிதி வசூல், வரவு சிலவு, வட்டக்குழு அமைப்பு

ஏ. பி. தர்மலிங்கம், செயலாளர்

கோவையில் பொதுச்செயலாளருக்கு வரவேற்பும் மாநில மாநாட்டு நிதியளிப்பும்

3—7—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு கோவை சிதம்பரம் பூங்காவில் பொதுச்செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், மாவட்டச் செயலாளர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களும் பேசுவர். அதுசமயம் மாநில மாநாட்டுக்கு கோவை மாவட்ட கழக சார்பில் நிதியளிக்கப்படும்.

காலை 2-மணிக்கு ரயிலடியில் வரவேற்பு. மாலை 4 மணிக்கு தெப்பக்குளம் வீதியிலுள்ள கழக அலுவலகத்திலிருந்து பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை ஊர்வலமாக சிதம்பரம் பூங்காவுக்கு அழைத்துச் செல்லப்படும்.

அன்று பிற்பகல் 1 மணிக்கு கழக சார்பில் பொதுச் செயலாளருக்கு வரவேற்பும், விருந்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, விருந்தில் கலந்து கொள்ள விரும்பும் தோழர்கள் நகர கிளையின் உதவி செயலாளரிடம் அதற்குரிய கட்டணம் 1 ரூபாய் செலுத்தி கலந்து கொள்ளவும்.

—கோவை நகர தி. மு. க.

கவிஞர் எம். எஸ். ராமசாமி

நம் கழகப் பிரமுகரும் பேச்சாளருமாகிய அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி அவர்கள் உடல் நலமில்லாத காரணத்தால் ஏற்கனவே ஒப்புதல் தந்த கூட்டம் தவிர மற்ற கூட்டங்களுக்கு கலந்து கொள்ள முடியாமைக்கு வருந்துவதுடன் இனி கூட்டங்களுக்கு அவரின் ஒப்புதலின்றி விளம்பரப் படுத்தக் கூடாதென்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன் என அருப்புக்கோட்டை தி. மு. க. செயலாளர் சுப்ரமண்யம் அறிவிக்கிறார்.

புதுவையில் வட்டக்குழு

*

மாநில மாநாட்டு நிதிக்காக ரூ 200 அளிக்கப்பட்டது

26—6—55 காலை 10-மணிக்குப் புதுவைத் தி. மு. கழகத்தில், தெ. ஆ. மாவட்டச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் தலைமையில் வட்டக்குழு அமைக்கப்பட்டது. வட்டக் குழுவின் செயலாளராகத் தோழர் ச. சிவப்பிரகாசம் அவர்களும் துணைச் செயலாளராகத் தோழர் வாணிதாசன் அவர்களும் பொருளாளராகத் தோழர் பெ. குப்புசாமி அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் புதுவை அரசியல் தேர்தல் பற்றிக் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும், மாநில மாநாட்டு நன்கொடை நிதிக்காகப் புதுவை வட்டத்தின் சார்பில் ரூ. 200 தெ. ஆ. மாவட்டச் செயலாளரிடம் அளிக்கப் பெற்றது. நன்றி கூறலுடன் கூட்டம் பகல் 2 மணிக்கு முடிவுற்றது.

"வரும் ஜூலை மாதம் 18 முதல் 23-ந்தேதி வரை நடைபெற இருக்கும் புதுவை மாவட்ட மக்கள் சபை—நகராண்மைக் கழகத் தேர்தல்களில், புதுவை வட்டத்திலுள்ள தி. மு. கழகங்கள் குறிப்பிட்ட எந்தக் கட்சிக்கும் தம் ஆதரவை அளிப்பதில்லையென்றும், ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள் அவரவர் தொகுதிகளில் நிற்கக் கூடிய அபேட்சகர்களுள் மக்கள் நலனுக்கும், ஏழை—பாட்டாளி மக்களின் உயர்வுக்கும், ஜனநாயகப் பண்புக்கும், உரிமைக்கும் பாடுபடக் கூடிய நல்லெண்ணமுடையவர்களுக்கே தத்தம் வாக்கைமட்டும் அளிப்பதென்று இக்குழு முடிவு செய்கிறது"

●

சென்னை மாவட்ட தி. மு. கழக முன்னாள் செயலாளர் தோழர். கே. எம். கண்ணபிரானுக்கு பாராட்டும், புதிய செயலாளர் தோழர் இளம்பரிதியை வரவேற்கவும் விழா ஒன்று சென்னை 'அறிவகத்'தில் 26-6-55-ல் நடைபெற்றது. விழாவை ஒட்டி அறிவகம் விசேட மின்சார விளக்குகளாலும், கழகக் கொடிகள்—தோரணங்களாலும். அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது.

துவக்கத்தில், அண்ணா அவர்களுடனிருந்து, சென்னை மாவட்ட கழக உறுப்பினர்கள் புகைப்படம் பிடித்துக் கொண்டனர்.

அடுத்து, தேனீர் விருந்து ஒன்று அளிக்கப்பட்டது.

பின்பு விழாவிற்குத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு அண்ணா அவர்களை தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் முன்மொழிந்தார்; தோழர் மணிவண்ணன் வழிமொழிந்தார். அண்ணா அவர்கள் தலைமை ஏற்றுக்கொண்டதும், புதிய செயலாளர் இளம்பரிதியை வரவேற்று தோழர், என். வி. நடராசன் சொற்பொழிவாற்றினர்.

அடுத்து முன்னாள் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரானுக்கு பாராட்டிதழ் ஒன்றினை மாவட்ட கழகச் சார்பில் தோழர். அ. பொ. அரசு வாசித்தளித்தார். பின்னர், தோழர்கள் இளம்பரிதி, கண்ணபிரான் ஆகியோர் தங்களுக்கு முறையே அளிக்கப்பட்ட வரவேற்பு பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்துப் பேசினர்,

அடுத்து இருவரையும் பாராட்டியும், வரவேற்றும் தோழர்கள் அ. பொன்னம்பலனார், காஞ்சி கல்யாண சுந்தரம், டி. வி. நாராயணசாமி, கே. எ. மதியழகன் ஆகியோர் பேசினர்.

இறுதியாக அண்ணா அவர்கள் இருவரையும் பாராட்டியும் வரவேற்றும் அரியதோர் கருத்துரை வழங்கினர்.

விழாவில், அண்ணா, பொன்னம்பலனார், காஞ்சி. கல்யாண சுந்தரம், மதியழகன், கருணாநிதி எம். எஸ். மணி, பராங்குசம், கோபால கிருஷ்ணன். டி. வி. நாராயணசாமி, எஸ். கஜேந்திரன், ப. வாணன், எஸ். எஸ். பி. லிங்கம், இராம. வெள்ளையன், இராம, சுப்பையா, முகவை. ஆர். எஸ். பாண்டியன், ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கோவை மாவட்ட செயலாளர், ஈ.வெ.கி. சம்பத், தெ. ஆ. மாவட்டச் செயலாளர் ஆர். சாம்பசிவம், திருச்சி மாவட்ட செயலாளர் அம்பில் தர்மலிங்கம், சேலம் மாவட்டச் செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம், தோழர். ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., ஓவிய நிபுணர் அங்கான் ஆகியோரின் வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன.

விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தஅனைவருக்கும் தோழர் என். வி. நடராசன் அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார். விழா நிகழ்ச்சிகள், ஒலிப்பதிவு செய்யப்பட்டன.

நமது அண்ணா அவர்களின் அறிவுரையே எனது பணியின் வெற்றிக்குக் காரணம்

—தோழர் கே. எம் கண்ணபிரான்

நான் ஏற்றுள்ள பொறுப்பை நிறைவேற்ற ஒத்துழைப்பைத் தர வேண்டுகிறேன்

—தோழர் இளம்பரிதி

சென்னை பாராட்டுக் கூட்டத்தின் முழு விவரங்கள்

தோழர் கே. எம் கண்ணபிரான் தனக்கு வழங்கப்பட்ட பாராட்டுரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

'நான் பணி பல புரிந்ததாகக் கூறியிருக்கிறீர்கள் அதற்காகப் பாராட்டியிருக்கிறீர்கள். ஆனால் நான் ஏதேனும் பணியாற்றி வெற்றி பெற்றிருந்தால் அதற்கு உங்களின் ஒத்துழைப்பும் அண்ணா அடிக்கடி வழங்கிய ஆலோசனைகளும்தான் காரணம். நான் செயலாளராயிருந்த காலத்தில் என்னுடன் ஒத்துழைத்த அத்தனை நண்பர்களுக்கும் தலைவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் மீண்டும் செயலாளராக வரவேண்டுமென்று பல நண்பர்கள் என்னிடம் வற்புறுத்தியபோது நான் இம்முறை செயலாளர் பதவிக்கு போட்டியிடப்போவதில்லை என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டேன். சிலருக்கு அதனால் என்மீது வருத்தமுங்கூட, ஏன் நான் போட்டியிட விரும்பவில்லையெனில் செயலாளராயிருந்தபோது சில காரியங்களை என்னால் செய்ய முடியாத அளவுக்குத் தொல்லைகள் ஏற்பட்டன, இன்று அந்த காரியங்களை முடிக்க எனக்கு அரிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது,

'நான் செயலாளராக, இப்போது இல்லாவிடினும் செயலாளராக இருந்த காலத்தில் பணியாற்றியது போலவே தொடர்ந்து தொண்டாற்றுவேன் என்ற உறுதியையும் உங்களுக்கு அளிக்கிறேன்.

*

பின்னர் தோழர் இளம்பரிதி தனக்குத் தரப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

'நான் மிகச் சாமானியன்—சாதாரணமானவன்—உழைப்பாளி. என்னை மாவட்டச் செயலாளராக்கி எனக்கு பொறுப்பைத் தந்திருக்கிறீர்கள். என்னிடம் நீங்கள் தந்திருக்கின்ற பொறுப்பை நான் திறம்பட நிறைவேற்ற உங்கள் அனைவரின் மனப்பூர்வமான முழு ஒத்துழைப்பையும் கோருகிறேன்.

'எந்தக் காரியமும் தனிப்பட்டவர்களால் செய்யப்பட முடியாது. பலர் ஒன்று சேர்ந்து பணியாற்றுவதின் மூலம்தான் வெற்றிபெற முடியும்.

'எனவே நீங்கள் எல்லோரும் உங்களுடைய பேராதரவினையும் ஒத்துழைப்பையும் நமது மாவட்டக் கழக நடவடிக்கைகள் அத்தனைக்கும் தந்து நம்மை எதிர்நோக்கி யிருக்கும் நெருக்கடியான எதிர்காலத்தில் சுழகம் வெற்றி பெறச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். எனக்களித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

26—6—55 ஞாயிறன்று, சென்னை மாவட்ட தி. மு. கழகத்தாரால்

அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில், முன்னாள் மாவட்ட செயலாளர்

தோழர். கே. எம். கண்ணபிரான் அவர்கட்கு மனமுவந்து வாசித்தளித்த

பாராட்டு இதழ்

●

அமைதியே உருவாய் அமைந்த அருமைத் தோழரே !

ஒரே லட்சியம் படைத்த—ஆனால் பல்வேறுபட்ட மனப்போக்கு கொண்ட தோழர்கள் சேர்ந்திருந்து செயலாற்றுவதெப்படி! சிக்கலான பிரச்னைதான்! அநேக ஐயப்பாடுகளை அடுக்கடுக்காக எழுப்பக் கூடியதுதான். ஆனாலும் என்ன! கொண்ட கொள்கையில் திண்ணிய பற்றுதலும், பேசச் சளைக்காத ஆர்வமும் படைத்த தோழர்களுக்கு, கருத்து மாறுபாடு ஒரு தடைக்கல்லாக இருக்க முடியுமா!

முடியாது என்பதை தங்கள் தலைமையிலே செயலாற்றிய சென்னை மாவட்ட தி. மு. கழகம் தெள்ளென விளக்கி விட்டது.

தாங்கள் பதவி ஏற்ற கொஞ்ச நாட்களுக்குள்ளாகவே நமது இயக்கம் அமைத்த மும்முனைப் போராட்டப் போர்க்களங்களிலே சென்னை மாவட்டம் காட்டிய வீரம்—செய்த தியாகம்—கணக்கில. தன் சக்திக்கு மீறிய துணிகரப் பங்கயம் தூலைப் போராட்டம். அடிக்கடி கிட்டாத வாய்ப்பு. அப்போராட்டத்தில் நமது மாவட்டம் ஆற்றிய அரும் பணியானது பூரிப்பும் பெருமிதமும் கொடுக்கின்ற அரிய சாதனையென்று கூறின் மிகையாகாது.

வெற்றிப்புகழ் மிக்க சென்னை மாவட்ட தி. மு. கழகம் பொன்னேட்டிலே பொறிக்கப்பட வேண்டிய சாதனைகள் அநேகம் சாதித்திருப்பதை இயக்க சரித்திரம் முழங்குகிறது. ஆனால் தாங்கள் பதவி வகித்த காலத்திலே நடந்தேறிய வேலைகளோ தங்கத் தகட்டிலல்ல கருங்கற் பாறைகளில் பதிய வைக்க வேண்டியவை என புரள்கின்ற சரித்திரத்தின் ஏடு புன்சிரிப்புத் தவழ சொல்லிக் கொண்டே நகர்கின்றது !

ஆம், அரிய சாதனைகளின் வீரவாசகங்களும் கரிய உருவத்தில் கற்றூணும் தங்களுக்குப் பொருத்தமே! ஏனென்றால் தாங்கள் ஒரு கருங்கல் மனிதர்; எளிதில் வளைந்து கொடுக்காத கொள்கைவீரர். மென்மை படாத கருங்கல்லைப் போலவே தங்களின் குறும்பான பேச்சும், செயலும் சகாத் தோழர்களிடம் வேலை வாங்கும் அரிய சாதனங்களாகத் தங்களுக்கு அமைந்திருந்தன. ''வேலை செய்வதைக் காட்டிலும் விளையாட்டுப் பேச்சிலும், விடுகதைச் சொல்வதிலும்தான் விருப்பம் அதிகம் போலும்'' என்று எங்களிற் பலர் ஆரம்ப காலத்தில் தங்களைப்பற்றி நினைத்கதுண்டு. ஆனால் வேலை யிருந்த நேரத்தில் மெய்வருந்தித் தாங்கள் உழைத்த உழைப்புக்கு எப்போதும் சென்னை மாவட்டக் கழகம் கடமைப்பட்டிருக்கிறது. ஏனெனில் செயலாளர் என்ற முறையில் தங்களுக்கு வாய்த்த கடமையை ஒருநாளும் விட்டுக் கொடுத்ததில்லை; தட்டிக் கழித்ததில்லை என்பதை பெருமையுடன் ஒப்புக் கொள்கிறோம்.

எங்களுக்கிருக்கும் இந்தப் பெருமை உணர்வு தங்களை எக்காலத்தும் எங்களுடனிருந்து பணியாற்றத் தூண்டும் சக்தி வாய்ந்ததென நம்புகிறோம். இயக்கப் பணியின் அடித்தளத்திலிருந்து, சாதாரணத் தொண்டராக—அமைப்பாளராக, துணைச்செயலாளராக, பிறகு நெருக்கடி மிக்க நேரத்தில் செயலாளராக இருந்து தொண்டாற்றிப் பெற்ற அனுபவத்தை என்றைக்கும் எங்களுடனிருந்து பயன்படச் செய்யுங்கள். இயக்கத்தின் வாயிலாகத் தாங்கள் பெற்ற படிப்பினையை அதே இயக்கத்தை வளர்க்கத் துடிக்கும் எங்களுக்குச் சொல்லுங்கள். அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரையை ஏற்று தங்களைப் போன்றோர் செப்பனிட்டுத் தந்த பாதையில் அணிவகுத்து நின்றிருக்கும் துடிதுடிப்பும் கொள்கை ஆர்வமும் கொண்ட எங்களுக்கு—சென்னை மாவட்ட தி. மு. கழக செயற்குழுவிற்கு நீங்கள் பெற்ற ஆர்வத்தையும் உங்களின் தூய்மையானதொண்டு ஒத்துழைப்பு ஆகியவைகளையும் நல்கி மாவட்டத்தின் சிறப்பை மேலும் மேலும் உயர்த்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அறிவகம் 26—6—1955 **சென்னை மாவட்ட தி. மு. கழகத்தார்**

தோழமையே, செயலாற்றுவதற்கு அடிப்படை சக்தி

பாராட்டு விழாவில் அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரை.

"சென்னை மாவட்டத்தில் வேறு சில மாவட்டங்களைக் காட்டிலும் குறைவான எண்ணிக்கையில்தான் கிளைகள் உள்ளன. என்றாலும் சென்னையின் மாண்பிற்குக் காரணம் சென்னையில் நடத்தப்படும் எந்தக் காரியமும் அரசாங்கத்தின் கவனத்தையும் கண்காணிப்பையும் பெறுமென்பதால்தான். சென்னைக் கழகத்திற்கு வாய்ப்புகளும் அதிகம் அதிகமான வாய்ப்புகளைப் போலவே அதிகமான பொறுப்பும் உண்டு.

'கடந்த காலத்தில் கழகத்தின் ஆற்றலைக் காட்டும் வகையில் நாம் போராட்டங்கள் நடத்தி யிருக்கிறோம்.

'நாம் ஆற்றல் கொண்டவர்கள் என்பதுடன் ஆக்க வேலைகளில் ஈடுபட்டு வருபவர்கள் என்பதற்கு நாம் பல காரியங்கள் செய்திருக்கிறோம்.

'தஞ்சையில் வீசிய புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் தரும் பொருட்டு நாம் நிதி திரட்டினோம். திரட்டிய சுமார் ரூ 30 ஆயிரத்திற்கும் கைத்தறித் துணிகள் வாங்கி புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தந்தோம்,

'ஆனால் சென்னையில் உள்ள பல வட்டங்களிலிருக்கும் தோழர்கள் வீடுவீடாகச் சென்று துணிமணிகள், அணிகள், பொருள்கள் எல்லாம் திரட்டி வந்து அறிவகத்தில் சேர்ந்திருந்தனர். அந்தப் பொருள்களைக் கண்ட நேரத்தில் நான் பெற்ற மகிழ்ச்சி— நிவாரணத்திற்கென நாம் திரட்டிய 30 ஆயிரம் ரூபாயைத் தடவிப் பார்த்தபோதுகூடக் கிடைக்கவில்லை ஏனெனில் துணிமணிகளை வீடுகளிலிருந்து சுலபத்தில் பெற்றுவிட முடியாது.

ஒவ்வொரு வீட்டு வாசலிலும் நமது தோழர்கள் புயலால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் அவதியை எடுத்துச் சொல்லி, அவர்களின் அல்லல்போக்க கழகம் மேற்கொண்டிருக்கும் நிவாரண நடவடிக்கைகள் பற்றியும் கழகத்தின் லட்சியம் பற்றியும் விளக்கம் தந்திருப்பார்கள், இந்த விளக்க உரை கேட்ட பின்னர்தான் மக்கள் துணிமணிகளை மனமுவந்து தந்திருக்க முடியும். தோழர் கண்ணபிரான் கிளைக் கழகங்களுடன் இவ்வித தொடர்பு கொண்டு பாராட்டுதலுக்குரிய பல காரியங்களைச் செய்திருக்கிறார்,

'பின்னர் கைத்தறித் துணிகளை தோளிலே தூக்கி விற்றோம்—நெசவாளர் துயர் துடைக்க.

'இப்படி நாம் செய்யும் ஆக்க வேலைகள் மக்களுக்கு 'நாம் ஒரு ஜீவசக்தியுடைய இயக்கத்தவர்' என்பதைத் தெளிவாக்கி யிருக்கின்றது.

'நமது கழகத் தோழர்கள் அந்தந்த வட்டார மக்களுடன் இன்னும் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும், வீடு வீடாகச் சென்று மக்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். 'இலவசப் படிப்பகங்கள், இராப் பள்ளிகள் முதலியன வட்டந்தோறும் நடத்த வேண்டும்,

பலவகையான ஆக்க வேலைகளை மேற்கொள்ளுவதின் மூலம் மக்களுக்கு நம்மிடம் இருக்கும் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் வளர்த்துக்கொள்ள முடியும்.

'இப்போது நமது கழக மாளிகை 'அறிவகம்' சில பல இடங்களில் கலைந்து விட்டிருக்கிறது. இன்னும் இரண்டொரு ஆண்டுகளில் நாம் அதனை பழுது பார்க்க வேண்டியவர்களாக யிருக்கிறோம்.

அடுத்து நாம் கழகத்திற்கென சென்னையில் ஒரு தனி மைதானம் வாங்க இருக்கிறோம் என்று நான் முன்பே தெரிவித்தேன்.

அந்த மைதானத்தில் கள்ளியும் காளானும் இருந்தால் அவற்றை அகற்றி விட்டு சுற்றுச் சுவர் எழுப்பி ஒரு சிறந்த வெளி அரங்கு நிர்மாணித்தாக வேண்டும் 'கள்ளி காளானை அகற்றவும் சுற்றுச் சுவர் எழுப்பவும் அரங்கு அமைக்கவும் ஒரு சில கட்டிட தொழிலாளர்கள் மட்டுமே நியமிக்கப்படுவார்கள். அவர்களுடன் வேலை செய்வதற்காகவென நான் உங்களை அழைப்பேன். அப்போது நீங்கள் உங்கள் உழைப்பைத் தரத் தயாராக இருக்க வேண்டும்.

'கடந்த இரண்டு மூன்று ஆண்டு காலமாக சென்னை மாவட்டச் செயலாளராகயிருந்த தோழர் கே எம். கண்ணபிரானைப் பாராட்டவும் புதிய செயலாளராக வந்திருக்கிற தோழர் இளம்பரிதியை வரவேற்கவும் இந்த விழா நடைபெறுகிறது,

'எனக்கு முன் பேசியவர்கள் கூறியதுபோல தோழர் கண்ணபிரான் செயலாளராக இருந்த காலத்தில் கழகம் பல நெருக்கடியான கட்டங்களை தாண்டி வந்திருக்கிறது அந்த நெருக்கடியான நேரங்களில் எல்லாம் தோழர் கண்ணபிரானின் உழைப்பு மிகவும் பாராட்டுதலுக்குரியது

தோழர் கண்ணபிரான் சென்னையில் சிலநிகழ்ச்சிகளை நடத்தவேண்டுமென்று அவ்வபோது கூறுவார். நான உடனே சரி ஆயிரம் ரூபாய் வசூலித்து என்னிடம் கொடுத்துவிட்டு பிறகு நான்சொல்லும் யோசனைபடி செய் எனபேன். உடனே முகம் கோணாமல் சரி அப்படியே செய்கிறேன் என்று கூறிச் சென்று அதுபோலவே குறிப்பிட்ட தொகையை வசூலித்து முன்னதாகவே என்னிடமோ அல்லது தலைமை அலுவலகத்திலோ சேர்த்துவிட்டு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை ஒழுங்காக செய்து முடித்திருக்கிறார்,

இந்தத் தொல்லை இப்போதைய செயலாளர் இளமபரிதிக்கும் ஏற்படக் கூடும்,

தோழர் கண்ணபிரான் எனக்குப் பிடித்தமான கழகத் தோழர்களிலே ஒருவர் அவர் ஆற்றிய பணி குறித்து நாம் எல்லோரும் அவரைப் பாராட்டுவது மிகப்பொருத்தமாகும்

'அதேபோல அவருக்குப் பிறகு செயலாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் தோழர் இளமபரிதியையும் வரவேற்கிறோம்—மேலும் தொடர்ந்து நல்ல பல பணியாற்றுவதற்காக.

'தோழர் கண்ணபிரான் பேசுகையில் நமது 'அண்ணா அவர்கள், அடிக்கடி அடிக்கடி...என்று இழுத்தாற்போல பேசினார். அண்ணா அடிக்கடி தொல்லைப் படுத்தினார் என்றும் கூறலாம் அல்லது அடிக்கடி ஆலோசனைகள் தந்தார் என்றும் அவர் கூறலாம்.

'நான் தொல்லைகள் தந்தருப்பேன்— அவை எல்லாம் கழக வேலைகள் நடைபெறவேண்டியதற்காக இருக்குமேதவிர வேறெதற்காகவும் இராது. நான் தொல்லைகள் தருவது தோழமை உணர்வால்' அந்தத் தோழமை உணர்வுதான் சட்டதிட்டங்களைக் காட்டிலும் அதிகமாகக் கவனிக்கப்பட வேண்டியது.

'வேறெல்லா மாவட்டத் தோழர்களையும்விட, சென்னையில் உள்ள தோழர்கள் சட்டதிட்டம் பற்றி நன்றாக அறிந்திருக்கக் கூடும்.

'சட்டதிட்டம் பற்றி விவாதிக்கத்தான் வேண்டும், ஆனால் நாம் நடத்துகிற விவாதம் நமக்கு நாளாவட்டத்தில் ஒளியைத் தரவேண்டும்—தெளிவைத் தரவேண்டும்—வெப்பம் தரக்கூடாது. எதுபற்றியும் நாம் நடத்தும் விவாதம் நமக்கு ஒளியைமிகுவித்து வெப்பத்தை குறைப்பதாக இருக்க வேண்டும்.

'பல வளையங்கள் கொண்ட சங்கிலியின் பலம் அந்தச் சங்கிலியில் உள்ள மிக நைந்துபோன வளையத்தின் பலவீனத்தைப் பொறுத்திருக்கிறது' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. நைந்துபோன வளையம் உடைந்துவிட்டால் சங்கிலி அறுந்து விடும். அதுபோலத்தான் நமது பலமும். எனவே தோழர்கள் தோழமை உணர்வுடன் சங்கிலித் தொடர்புடைய நமது இயக்கத்தில் பணிபுரிய வேண்டும்."

*

சென்னை மாவட்டத்திற்கென தனிக் கட்டிடம் அமையுங்கள்

"இந்த அறிவகம்— மாநிலமெங்குமுள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கு பொதுச் சொத்தாகும். எனவே மற்ற மாவட்டத் தோழர்களுக்கிருக்கும் உரிமையைப் போலவே சென்னை மாவட்டமும் உரிமை கொள்வது தான் சிறப்புடையதாகும் என்பதை சென்னை மாவட்டத் தி. மு. க. தோழர்களை ஒப்புக் கொள்வார்களென்று நம்புகிறேன். எனவே சென்னை மாவட்டக் கழகத்துக்கென சொந்தமாகத் தனிக் கட்டிடம் ஒன்று அமைக்க முன்னாள் செயலாளர் கண்ணபிரான் அவர்களும், இந்நாள் செயலாளர் இளம்பரிதி அவர்களும் மற்ற தோழர்களும் முயற்சி செய்து முடிக்க வேண்டுகிறேன்" என்று தோழர் கே. எம் கண்ணபிரான் அவர்களைப் பாராட்டியும் தோழர் இளம்பரிதி அவர்களை வரவேற்றும் தோழர் **காஞ்சி கல்யாண சுந்தரம்** அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

பிறகு அண்ணா அவர்களின் கலைமை உரைக்குப் பின் தோழர் **என். வி நடராசன்** நன்றி கூறி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

சென்னை மாவட்டக் கழகத்திற்கென தனிக் கட்டிடம் ஒன்று அமைத்துக் கொள்ள வேண்டும் என்று தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள் யோசனை தெரிவித்தார் அவர்கள் யோசனையை சென்னை மாவட்டத் தோழர்கள் மனமார வரவேற்று ஒரு கட்டிடம் வாங்குகிற முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வெற்றி காண வேண்டும். இதற்கு முதன் முதலில் நமது அண்ணா அவர்களிடமே நன்கொடை பெறமுடியும்...'

அண்ணா அவர்கள் குறுக்கிட்டு தான் ரூ. 100 நன்கொடை தருவதாக அறிவித்தார். தொடர்ந்து தோழர் மு கருணாநிதி ரூ. 100 தருவார் என்றும் அண்ணா அவர்கள் அறிவித்தார்.

அந்த அறிவிப்பின்போது தோழர்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் ஆரவாரப் பேரொலி எழுப்பினர்.

தொடர்ந்து என். வி நடராசன் அவர்கள் பேசியதாவது:—

'அண்ணா அவர்களும் தோழர் கருணாநிதியும் நன்கொடை தர உறுதி தந்து விட்டனர். இனி நாம் முழு முயற்சியும் செய்து சென்னை மாவட்டத்திற்கு ஒரு தனி அலுவலகமும் ஒரு புத்தக சாலையும் அமைக்கப் பாடுபடுவோம் என்று கூறியதோடு அழைப்பிற்கு இணங்கிவருகை தந்த அத்தனை பேருக்கும் அண்ணா அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

புத்தகப் பூங்கா

ஓவிய நிபுணர் பாலு சகோதரர்களின் கலைக்கூட மலர்

ஓவிய நிபுணர் பாலு சகோதரர்கள் கலைத்துறையில் ஆற்றி வரும் தொண்டினை தென்னாடு மட்டுமல்லாமல் வடநாடும்—ஏன் இந்தியத் துணைக் கண்டத்தின் முக்கிய பகுதிகளிலுள்ள அனைவரும் அறிந்ததேயாகும். பாலு சகோதரர்களின் கலைத்தொண்டு தமிழகத்திற்குள்ள சிறப்புகளில் ஒன்று எனக் கூறினும் மிகையாகாது

"வள்ளுவன் குறளை வையகமெல்லாம் வாரி இறைய்டா தமிழா" என்று ஒருகவிஞர் பாடியுள்ளார். அம்மகத்தான சாதனையை பாலு சகோதரர்கள் தங்களின் கலைக்கூட மலரில் நிறைவேற்றியிருப்பது கண்டு பூரிப்படைகிறோம்—பெருமிதம் கொள்கிறோம்.

மலரில் வகுத்துள்ள வள்ளுவர் பாதையில் நாம் செல்லும்போது காந்தியடிகளின் வாழ்க்கைக் குறிப்புகளையும், வீரகட்டபொம்மனின் வரலாற்றினையும் காணும் வாய்ப்பு கிடைக்கிறது,

திராவிடர்களின் அழியாச் செல்வமாகிய அகநானூறு. புறநானூறு ஆகியவைகளையும் கலைக்கூட மலரில் குறிப்பிடத்தக்க வகையில் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. சீவக சிந்தாமணி மதுசிந்தனைக்கு விருந்தளிக்கிறது.

பெரியார் ஈ. வே. ரா., அன்னை நாகம்மையார், மறைமலை அடிகளார். உ. வே. சாமிநாத அய்யர், தமிழ்ப் பெரியார் திரு. வி. க., ஆச்சாரியார், நாவலர் நெடுஞ்செழியன், வீராங்கனை தில்லையாடி வள்ளியம்மை, மற்றும் பல அறிஞர்கள், கலைஞர்களின் உருவப்படங்களும் இயற்கைக் காட்சிகள் அனைத்தும் உண்மையிலேயே கலைக்கூடமாகவே காட்சியளிக்கின்றன.

மலரில் இடம் பெற்றுள்ள முக்கிய கட்டுரைகள், அதற்கான ஓவியச் சிறப்புடன் அலங்கரிக்கப்பட்டிருப்பதை எவ்விதம் பாராட்டுவதென்றே திகைத்தோம். அந்த அளவுக்கு நம்மை மகிழ்ச்சியில் மூழ்கடிச் செய்கிறது, ஓவிய நிபுணர் பாலு சகோதரர்களின் இம்மகத்தான முயற்சிக்கு நமது மனப்பூர்வமான பாராட்டுதலை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தென்னாட்டினர் ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டிய கருத்துக் களஞ்சியமாகும் பாலு சகோதரர்களின் கலைக்கூட மலர்.

கால் ஆணிக்கு மேல் பூசும் மருந்து

குதிக்காலிலும், பாதத்திலும், பள்ளம் பள்ளமாயும், சதை வளர்ந்து ஆணியைப்போல் ஏற்பட்டு நடக்கும்போது பாதமானது தரையில் வைக்கமுடியாமலும் கல் பட்டால் துடிதுடிப்பதுமாய் ஏற்படக்கூடிய வியாதியை ஆச்சரியகரமாய் கண்டிக்கக் கூடிய மருந்து இதுவே.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூ. 2-8-0 தபால் சார்ஜ் இனும்

ஸ்ரீ முத்து மெடிகல் ஹால்
வியாசர்பாடி சென்னை-12

செய்திகள்

பம்பாய்

புதியதோர் கிளை

பம்பாய்—மலாட் (Malad) எனும் பகுதியில் தி. மு. கழக கிளை அமைப்புக் கூட்டம், 12-6-55 ஞாயிறு மாலை 7-மணிக்கு பட்டாணி சாலில் நடைபெற்றது. தோழர் க. சு. திருநீலகண்டன் வரவேற்புரையாற்றிய பின், பம்பாய் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் எஸ். தியாகராசன் தலைமை தாங்கினார். தோழர் சி. த. மு. இரா. ஆரிய சங்காரன் கொடியேற்றி வைத்தார்.

தோழர்கள் க. ஆ. இராமசாமி—செயலாளர் காங்கவல்லி தி. மு. க., த. மு. பொற்கோ, வடவைக்குயில் ('முயற்சி' ஆசிரியர்) இரா. சண்முகராசன், சா. தர்மராசன் துணைச் செயலாளர் தாராவி தி. மு. க., வி. தேவதாசன் செயலாளர் பாண்டுப் தி. மு. க. ஆகியோர் கழகத்தை நடத்திச் செல்ல வேண்டிய நெறிமுறை குறித்து விளக்கந்தந்தனர். கீழ்க்காணும் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

செயலாளர் டி. எ. அழகமுத்து, துணைச்செயலாளர் எஸ். மணி நடராசன் பொருளாளர் ஏ. பி. மூக்கையா, செயற்குழு: தோழர்கள் யோககுரு, வைத்தியலிங்கம், திருநீலகண்டன், டி. பி. நயினார், ஆ. சங்கரன், சாமி, கோபால் பொதுக்குழு: தோழர்கள் டி. பி. நயினார், க. சு. திருநீலகண்டன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தாராவி

16-6-55 மாலை 6-30 மணியளவில் ப. தி. மு. க. (தாராவி கிளை) உறுப்பினர் கூட்டம் 'திராவிடகம்'த்தில் கூடியது. தோழர் இரா. மா. சண்முகராசன் திராவிடப் பண்பாடினார் கூட்டத்திற்கு மா. இரா. குறள்தாசன் தலைமை தாங்கினார். தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர்கள் எல். நெல்லைச் செழியன், பி. எஸ். செல்லையா, த. மு. பொற்கோ, எ. எல். பெருமாள், வடவைக்குயில் ஆகியோர் கழக வளர்ச்சி குறித்து சொற்பொழிவாற்றினர்கள், மாநில மாநாட்டின் நிதிக்காக தாராவி கிளையின் சார்பாக வசூலித்த தொகையான ரூ 174—5—0 ப. தி. மு. க. பொதுச்செயலாளரிடம் தாராவி கிளையின் செயலாளர் தோழர் சி. த. மு. இரா. ஆரியசங்காரன் அளித்தார் நிதி அளிப்பதற்கு நன்றி தெரிவித்தும் கழகத்தின் வளர்ச்சி குறித்தும் ப. தி. மு. க. பொதுச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் அறவுரை ஆற்றினார்.

திருவள்ளுவர் கலா மன்றம்

பம்பாய் திருவள்ளுவர் கலா மன்ற உறுப்பினர் கூட்டம் 25—6—55 காலை 11 மணிக்கு தாராவி மகிம் ரோட் சால் பின்புறமுள்ள பந்தலில் தோழர் கே. எம். பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. கடந்த கூட்ட நிகழ்ச்சிகளும் கடந்த ஆண்டின் வரவு செலவு கணக்கும் படிக்கப்பட்டன. மன்ற துணைச் செயலாளர் சீனிவாசன் அவர்களால் வாசித்து ஒப்புக் கொள்ளப்பட்டது. மன்ற செயலாளர் தோழர் இரா வளர்மதி அவர்களின் விலகல் கடிதம் ஒப்புக் கொள்ளப்பட்டு செயலாளராக உ. அ. செல்லையா ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டார். பின் பல முக்கிய பிரச்னைகள் பேசப்பட்டு துணைச்செயலாளர் நன்றி நவில கூட்டம் 1-30 மணிக்கு இனிது கலைவுற்றது. மன்ற சம்பந்தமாக கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்வோர் எண் 4 நகிம் ரோட் சால் பம்பாய்-17 என்ற முகவரிக்கு எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அந்தேரி

19—6—55 ஞாயிறு மாலை 6 மணியளவில் பம்பாய்—அந்தேரி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பம்பாய் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தோழர் தியாகராசன் அவர்களுக்கும் சட்டதிட்ட அமைப்புக் குழுச் செயலாளர் தோழர் த. மு. பொற்கோ அவர்களுக்கும் அந்தேரி தி. மு. க. செயலாளர் தோழர் எல் எம். பாண்டியன் தலைமையில் பாராட்டுக் கூட்டம் தோழர் ஏ. கோபன் திராவிடப்பண் பாட விழா ஆரம்பமானது. தலைவர் முன்னுரைக்குப் பின் சட்டதிட்ட அமைப்புக்குழுச் செயலாளர் தோழர் த. மு. பொற்கோ கழகக் கொடியை ஏற்றுவித்து கொடியின் இலட்சியம் பற்றியும் கழக வளர்ச்சிபற்றியும் சொற்பொழிவாற்றினர்கள். பின்னர் முறையே தோழர்களான இரா. தஞ்சைத்துரை, அழகமுத்து, உ. அ. செல்லையா வடவைக்குயில், க. ஆ. இராமசாமி, சா. தர்மராசன், பட்டுக்கோட்டை தனிக்கொடி ஆகியவர்கள் ப. தி. மு. க. பொதுச்செயலாளரையும் சட்டதிட்ட அமைப்புக் குழுச் செயலாளரையும் பாராட்டிப் பேசினர்கள்.

பின்னர் ப. தி. மு. கழகப் பொதுச் செயலாளர் தோழர் தியாகராசன் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கழக வளர்ச்சிக்கான அறிவுரைகளையும், ஆக்கவுரைகளையும் எடுத்தியம்பியதோடு 'நம்நாடு' நமது ஏடு. அதன் வளர்ச்சி நமது வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிவது. அளவில் சிறியது என்றாலுங்கூட ஆற்றலில் வலிவு வாய்ந்தது எனவே கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் 'நம்நாடு' நாளிதழைவாங்கி நம்நாட்டின் வளர்ச்சிக்குத் துணைபுரிய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அந்தேரி தி. மு. க. கிளையின் சார்பில் நூலகம் ஒன்றும் சொற்பயிற்சி வகுப்பும் வைத்து நடத்துமாறு ஆலோசனை கூறினார்.

திருச்சியில் நடக்கவிருக்கும் தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டு நிதிக்காக அந்தேரி தி. மு. க. கிளையின் சார்பில் ரூ 30, காங்கவல்லி தி. மு. க. கிளையின் சார்பில் ரூ 40-ம் ப. தி. மு. க. பொதுச் செயலாளரிடம் அளிக்கப்பட்டன.

சௌந்திர பாண்டியனார் பகுத்தறிவு மன்றம்

சௌந்திர பாண்டியனார் பகுத்தறிவு மன்றத்தின் சார்பில் 20—6—55 மாலை 6-30 மணிக்கு ப. தி. மு. கழகப் பொதுச் செயலாளர் திரு. எஸ் தியாகராசன் அவர்கட்கும் சட்டதிட்ட அமைப்புக் குழுச் செயலாளர் திரு த. மு. பொற்கோ, அவர்கட்கும் (அன்பகத்தில்) பாராட்டுவிழா நடைபெற்றது.

விழாவைத் துவக்கி வைத்து மன்றச் செயலாளர் மா. இரா. குறள்தாசன் பேசினார், விழாவிற்கு தோழர் சா. தர்மராசன் தலைமை தாங்கினார்,

செயலாளர்களைப் பாராட்டி தோழர்கள் புக்காசு பி. எஸ் செல்லையா, வி. தேவதாசன், வடவைக் குயில், செண்பகப்பாண்டியன், வளர்மதி ஆகியோர் பேசினார்கள் செயலாளர்கள் தமக்களித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்து அரியதோர் சொற்பொழிவாற்றினார்கள், பின்னர் தேனீர் விருந்தும் வழங்கப்பட்டது

*

சங்கரன்பந்தல்

15—6—55 மாலை 6 மணிக்கு கடைத்தெருவில் தோழர் பக்கிரிசாமி தலைமையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சி ஜம்பு, ஆர், பாலகுருசாமி, அறிவுடை நம்பி, பேராசிரியர் அன்பழகன் பேசினர்.

திருவொற்றியூர்

25—6—55 சனிக்கிழமை மாலை திருவொற்றியூர் தி. மு. கழக ஆதரவில் சன்னதி வீதி திடலில் தோழர் டி. கே. பழனிசாமி தலைமையில் பொதுக்கூட்டம் துவங்கியது. முன்னாள் மாவட்டச் செயலாளர் கே. எம். கண்ணபிரான் அவர்களுக்கு செயலாளர் எஸ். எல். வெங்கட்ராமனால் பாராட்டிதழ் வாசித்தளித்து கைத்தறித் துண்டு அணிவிக்கப்பட்டபின் தோழர் கண்ணபிரான் அவர்கள் நன்றி தெரிவித்து பேசினார்.

பின்னர் டி. கே. சீனிவாசன் அவர்கள் 'யார் பொதுவுடமை வாதிகள்' என்ற பொருள்பற்றி விரிவுரையாற்றினார்.

பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதும் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராஜேந்திரன் பேசினார்.

ஆறு ஆண்டுகளாக பொதுச்செயலாளராகப் பணியாற்றிய அறிஞர் அண்ணா அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஏறக்தாழ இருபத்தைந்து ஆயிரம் மக்கள் வாழ்கிற திருவொற்றியூரில் உடனடியாக ஓர் பிரசவ விடுதியை திறக்க வேண்டுமென்றும் அதுபோலவே ஓர் உயர்நிலைப்பள்ளியை கூடிய சீக்கிரம் கட்ட ஏற்பாடு செய்யும்படி ஊராண்மை மன்றத்தாரையும் மாவட்டமன்றத்தாரையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது

25—3—55 அன்று M. S. P 4548 என்னும் போலீஸ் அதிகாரிகளின் கார் நூருன்னிசா என்ற பெண் குழந்தைமீது ஏறி உடனே குழந்தை இறந்துவிட்டது, இதுபற்றி அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்குமாறு இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

காட்டுச்சேரி

7—6—55 மாலை 6 மணிக்கு கடைத்தெருவில் தோழர் கோவிந்தராசு தலைமையில் தி. மு. கழக துவக்க விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் என். வி. நடராசன், என். கிட்டப்பா, சி. ஜம்பு தி. மு. கழக இலட்சியம்பற்றி விளக்கிப் பேசினர்

திருவிளையாட்டம்

20-6-55 மாலை 6 மணிக்கு கடைத்தெருவில் வேணுகோபால் தலைமையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் சி. ஜம்பு, என். கிட்டப்பா, சௌந்திரராசன், சி. பி. சிற்றரசு சொற்பொழிவாற்றினர்.

சிட்டுக் குருவி சத்தின் தாது புஷ்டி லேகியம்

இந்த லேகியம் புருஷர்கள் லௌகீக சுகத்தை அனுபவிக்க சக்தி இழந்து போதல் என்னும் துக்ககரமான கொடிய வியாதியைப் போக்கி சுகம் அனுபவிக்கச் செய்யும் மேலும் சொப்பனத்தில் வீரியம் இழப்பது போன்றவற்றைத் தடுத்து பலமுள்ளவர்களாகச் செய்யும் இன்னும் விபரீத சேர்க்கையால் ஏற்படும் வியாதிகளான வெள்ளை, மூத்திர எரிச்சல், அடிக்கடி மூத்திரம் போதல், நீர்சுருக்கு, நீரடைப்பு முதலியவைகளை மாற்றி சுகமடைய செய்வதுடன் ஆண் பெண் இழந்துபோன தேகவலுவைப் பெற்று அவரவர் அவர்களது தன்மையை அடைந்து மகிழ்ச்சி அடையும்படி செய்யும். இந்த லேகியத்தை 48-நாள் சாப்பிடவேண்டும்.

இத்தாது புஷ்டி லேகியத்தை பலவித பஸ்பங்களாலும், பலவித மூலிகைகளாலும் ஒன்பது வகை வித்துக்களாலும் பலவகை வேர்களுடன் கடைச் சரக்குகளும் சேர்ந்து இத்துடன் நெய், பால், தேன் கலந்து பல பின்தாக்களும் ஒன்று கலந்து அதற்குத் தகுந்த முறையில் பதப்படுத்தி மணம் குணம் பொருந்திய உருசியுடன் கூடியது. பத்தியமில்லை; சுகமடையலாம். இதனை தொடர்ந்து ஒவ்வொருவரும் அருந்தினால் ஆயுள் உள்ளளவும் மற்ற மருந்து அருந்த வேண்டியதில்லை. லேகியத்தில் தாமிர பஸ்பம், அப்ரேக் செந்தூரம், வங்க பஸ்பம் அயச்செந்தூரம், காந்தச் செந்தூரம், கல்நார் பஸ்பம் முதலியவைகளை சேர்த்துள்ள சிறந்த ஔஷதம்.

ஒரு மண்டலம் 48-நாள் சப்பிடக்கூடிய லேகியம் சேர் 2-க்கு ரூ. 6—0—0
ஒரு மண்டலம் வாங்குவோருக்கு போஸ்டேஜ் இனும்.

ஸ்ரீ முத்து மெடிகல் ஹால்
வியாசர்பாடி, மதராஸ்—12

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ்: 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1
பார்சல் ஆபீஸ்: 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8, கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
,, 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
,, கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
,, வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிட நாட்டுக் கல்வி வரலாறு.

19

மக்கள் கல்வி நலனில் அக்கறை கொண்டு காரியமாற்ற முன் வந்த ஆட்சித் தலைவர்களில் சென்னை மாகாண கவர்னராக இருந்த சர். தாமஸ் மன்றோ அவர்கள்தான் முதன்மையானவர். அவர் 1822-ல் மாவட்டக் கலெக்டர்கட்கு எழுதியுள்ள சுற்றறிக்கையில் தென்னிந்திய மக்களின் கல்வி அறிவை வளரச் செய்ய வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி யுள்ளதினின்றும் இவ்வுண்மையைத் தெரிந்து கொள்ளலாம். "இந்திய மக்களின் அறியாமையைப் பற்றி இங்கிலாந்திலும் இந்தியாவிலும் மிகுதியான அளவில் எழுதப்பட்டுள்ளது. அவர்களின் கல்வி அறிவை வளர்க்க வேண்டும் என்றும் வற்புறுத்தி எழுதப்பட்டுள்ளது. ஆனல் இவைகள் யாவும் வெறும் பேச்சளவிலும் எழுத்தளவிலும் இருக்கின்றன இதற்கான உருப்படியான காரியங்கள் எதுவும் செய்யப்படாமலே இருக்கின்றன. இந்நாட்டில் ஏற்பட்டுள்ள நமது அரசாட்சியும் அதனுல் ஏற்பட்டுள்ள முதற்தரமான ஆட்சி ஸ்தாபனங்களும் மக்களுடைய அறிவின் தராதரத்தை அறிதற்கான விவரங்களை சுலபமாக சேகரிக்க முடியும். நாம் இந்நாட்டின் பூகோள அமைப்பை தெரிந்து கொண்டுள்ளோம். பயிர்த்தொழில் விவரத்தை சேகரித்துள்ளோம். மக்களின் தொகையும், அவர்

19-வது நூற்றாண்டு துவக்கத்தில் திராவிடர் பார்ப்பனர் கல்வி நிலை.

களின் வாழ்க்கை விவரங்களையும் தெரிந்து கொண்டுள்ளோம். ஆனல் அவர்களுடைய கல்வித் தரத்தைப்பற்றி சிறிதும் தெரிந்து கொள்ளவில்லை. இந்நாட்டின் கல்வி நிலையை தெரிந்து கொள்வதற்கான வழி வகை நூல்கள் ஒன்று மில்லை. ஆகவே இந்நாட்டின் கல்விச்சாலைகளின் விவரங்களையும் அவைகளின் நடைமுறை விவரங்களையும் சேகரிப்பது நாட்டின் நல்வாழ்விற்கு துணையாக நிற்கும்'' எனக் கூறி மக்களின் கல்வி அபிவிருத்தி அவசியத்தை வற்புறுத்தினுர். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையையும், அப்பள்ளிகளில் புகட்டப்பட்டு வரும் கல்வி விவரத்தைப் பற்றியும், ஆசிரியர் மாணுக்கர் விவரம் முதலியவை பற்றியும் புள்ளி விவரங்கள் சேகரித்து அனுப்பும் படிக் கட்டளைப் பிறப்பித்தார்.

இக்கட்டளையின்படி மாவட்டக் கலெக்டர்கள் தாம் சேகரித்த புள்ளி விவரங்களை அனுப்பி வைத்தனர். இவர்களால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளில் பெல்லாரி, தென்கன்னடம் ஆகிய இரு மாவட்ட அறிக்கைகளும் கல்வி சரித்திர ஆசிரியர்களால் மிகவும் புகழப்படுகின்றன, இவ்விரு அறிக்கைகளும் அம்மாவட்டங்களின் கல்வி நிலைமையை விரிவாகக்கூறுகின்றன. நாட்டு மக்களால் நடத்தப்பட்டுவந்த கல்விக் கூடங்களின் விவரம், புகட்டப்பட்டு வந்த கல்வியின் தரம், ஆசிரியர்களின் எண்ணிக்கை, மாணுக்கர்கள் கல்வி பயின்றுவந்த விதம், இன்னும் இப்படிப்பட்ட முழுவிவரங்களும் இவ்வறிக்கைகளில் இடம்பெற்றுள்ளன.

மாவட்ட கலெக்டர்கள் அனுப்பி வைத்த அறிக்கைகளைக் கண்ட தாமஸ் மன்றோ மக்களின் கல்வி நிலையைக் கண்டு மனம் வருந்தினுர், மக்களிடையே நிலவி நின்ற ஏழ்மை காரணமாகவும் அரசாங்கத்தின் பாராமுகம் காரணமாகவும் மக்களின் கல்விநிலை மோசமாக இருந்து வந்ததை மன்றோ உணர்ந்தார். கல்வி முன்னேற்றத்திற்கான காரியங்களில் ஈடுபட விரும்பினுர். மக்களின் கல்வி— அறிவு பெருக வேண்டும் என விழைந்தார், அதற்கான முயற்சியையும் மேற்கொண்டார். 1826 மார்ச் 10-ந் தேதி அரியதொரு திட்டம் தயாரித்தார். தகுதியும் திறமையும் உள்ள ஆசிரியர்களை தயார் செய்வதற்கான ஒரு தலைமைப் பயிற்சிப் பள்ளியை சென்னையில் நிறுவுதல், மாவட்டத் தலைநகர் ஒவ்வொன்றிலும் இரண்டு மாவட்ட தலைமைப பள்ளிகள் நிறுவுதல் (ஒன்று திராவிடர்கட்கு மற்றொன்று முகம்மதியர்கட்கு) தாலூக்கா தலைநகரங்களில் தாலுக்கா பள்ளிகள் நிறுவுதல் என திட்டத்தில் காணப்பட்டது. திராவிடர்கட்கு அவர்களது தாய் மொழிகளிலும், முஸ்லீம்களுக்கு அரபி, பார்சி, உருது மொழிகளிலும் கல்வி புகட்டப்பட வேண்டும் என்பதும் திட்டத்தின் கூற்றுகும். பிள்ளைகளுக்கான பாடப் புத்தகங்களை 'சென்னை பாடப் புத்தக சங்கம்' அச்சடித்து கொடுப்பது எனவும் அதற்கான 700 ரூபாய் மாதந்தோறும் கொடுப்பதெனவும் திட்டத்தில்காணப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாவட்டப் பள்ளியும் மாதந்தோறும் 15 ரூபாய் உபகாரம் பெறுவதெனவும், தாலூக்காப் பள்ளி மாதந்தோறும் 9 ரூபாய் அடைவதெனவும் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இத்திட்டப்படி 20 முகம்மதிய மாவட்டப பள்ளிகளும் 20 திராவிட மாவட்டப் பள்ளிகளும் 300 தாலுக்காப் பள்ளிகளும் நிறுவுவதென முடிவுசெய்யப்பட்டது. ஆண்டு ஒன்றுக்கு 48000 ரூபாய் செலவாகும். இப்'பொதுமக்கள் கல்வித்திட்டம்' கிழக்கிந்திய கம்பெனி டைரக்டர்களால் அங்கீகரிக்கப்பட்டது. தாமஸ் மன்றோவின் எண்ணமும் செய்கையும் கம்பெனி டைரக்டர்களால் வெகுவாகப் புகழப்பட்டன. கூடுமான வரையில் நாட்டுக் கல்வி முறைகளை வளர்த்து வரும்படியும் நாட்டுக் கல்வி முறைகளில் திடீர் மாற்றம் எதுவும் செய்து மக்களின் சந்தேகத்தை கிளப்பிவிடாமலும் கல்வியின தரம் படிப்படியாக உயர்வடையும் வழிவகைகளை கடைப்பிடித்து வரும்படியும் கம்பெனியார் தமது கருத்துக்களை தெரிவித்தனர், இவர்களது ஒப்புதல் வருவதற்கு முன்னமே மன்றோ தம் திட்டத்தை அமுல் செய்து கல்வித்துறை வளர்ச்சியடைந்து வரும்படி செய்தார். தமது திட்டத்தை சரிவர அமுல்நடத்துவதற்காக மன்றோ ஒரு 'பொதுக் கல்விக் கமிட்டியை' நிறுவினுர். இக்கமிட்டி பின்னர் பல மாற்றங்களை யடைந்து முடிவில் சர்க்கார் கல்வி இலாக்காவாக நிலைத்தது. இந்த கமிட்டி முதன் முதல் சென்னையில் ஒரு மத்திய ஆசிரிய பயிற்சிப் பள்ளியை நிறுவியது. இப்பயிற்சிப் பள்ளியானது படிப்படியாக வளர்ந்து தற்போயை பிரசிடென்சி காலேஜ் ஆக வளர்ந்துள்ளது. இம்மத்திய பயிற்சிப் பள்ளியில் பல மாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் அனுப்பப்பட்டு பயிற்சி பெற்று வந்தனர். பயிற்சி பெற்றோர் மாவட்டத் தலைமைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களாக அனுப்பப்பட்டனர். 70 தாலூக்காப் பள்ளிகளும் 30 மாவட்டத் தலைமைப் பள்ளிகளும் துவக்கப்பட்டன. எல்லாப் பள்ளிகளிலும் தாய் மொழிகள் மூலமே கல்வி புகட்டப்பட்டு வந்தது. உள்நாட்டுக் கல்வி முறையைப் பின்பற்றியும் மேல்நாட்டு விஞ்ஞான இலக்கிய உயர்வுகளை விளக்கிக் கூறும் பாடங்கள அவ்வப்போது போதிக்கப்பட்டும் வந்தன. இப்பள்ளிகள் யாவும் ஊர்த் தலைவர்களின் மேற்பார்வையில் நல்ல முறையில் நடந்து வந்தன. இந்நல்ல சமயத்தில்தான் சர் தாமஸ் மன்றோ அவர்கள் 1827-ல் காலமானுர்கள். திராவிட நாட்டின் கல்வி சீர்திருத்த முதல்வர் அகால மரணமடைந்த செய்தி நாட்டு மக்களை பெரிதும் துக்கக் கடலில் ஆழ்த்தியது. நாட்டு மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட ஆட்சித் தலைவரின் மறைவு குறித்து வருந்ாதார் இல்லை, தாமஸ் மன்றோ அவர்கள் துவக்கிய கல்வி சீர்திருத்தமானது பொதுமக்களின் அறிவு வளர்ச்சி நோக்கமாக இருந்தது என்பதும் அவர்களது சமூக முன்னேற்றம் அடிப்படை எண்ணமாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அவர் சுமார் அரை லட்ச ரூபாய் செலவில் கல்வி சீர்திருத்தக் காரியத்தைத் துவங்குவதற்கு கிழக்கிந்திய கம்பெனி டைரக்டர்களுக்கு எழுதிய கடிதத்தில் இந்நல்லெண்ணமும் நோக்கமும் நன்கு புலப்படுகின்றன. 'நாம் செலவிடப் போகும் இப்பெருந்தொகை நாட்டின் முன்னேற்றத்தினுல் திரும்பப் பெறப்படும், மக்களிடையே பொது அறிவு வளர வளர அவர்களது வாழ்க்கையில் முன்னேற்றமான நல்ல பழக்கவழக்கங்களும் வளர்ச்சி யடையும்; புதுமையான தொழில் துறைகளிலும் வாழ்க்கைத் துறைகளிலும் அவர்களது கவனம் செல்லும் அவர்களது பொதுவான முன்னேற்றம் அரசாங்க முன்னேற்றத்திற்கு துணையாக அமையும்' எனத் தமது கடிதத்தில் மன்றோ அவர்கள் கூறியுள்ளது அவரது பரந்த நோக்கத்தை எடுத்துக் காட்டுவதாகும்.

சர். தாமஸ் மன்றோ

சர் தாமஸ் மன்றோ அவர்கள் கல்வி முன்னேற்றத்திற்கான காரியத்தில் ஈடுபடுவதற்கு முன்னரே நாட்டு மக்களின் கல்வித்துறையை நன்கு ஊன்றி கவனித்துள்ளார் என்பது அவர் மாவட்டக் கலெக்டர்களுக்கு விடுத்த அறிக்கையில் நன்கு தெரிகறது. இந்நாட்டில் சாதி பாகுபாடு இருந்து வந்த உண்மையும் ஒரு சில சாதியினர் தம் சாதியினருக்கு மட்டுமே கல்விச் சாலைகள் நடத்திவந்த

திராவிட மக்கட்கு சர். தாமஸ் மன்றோவின் கல்வித் தொண்டு

உண்மையும், நாட்டு மொழி ஒன்றுக விருக்க வேற்று மொழிகளைத் தமது தாய்மொழிகளாகக் கூறிக் கொண்டு அம்மொழிகளின் வளர்ச்சிக்காக பாடுபட்டு வந்ததும், அதற்கென அரசாங்க மானியங்கள் பெற்று வந்ததும் தாமஸ் மன்றோவிற்கு நன்கு தெரிந்ததேயாகும் பார்ப்பனர்கள் தமது சுயசாதி முன்னேற்றத்தை மட்டுமே கருத்தாகக்கொண்டு கல்வித்துறையை ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததும், ஆட்சியாளர்களையும் ஜமீன்தார்களையும் பிரபுக்களையும் தம வசப் படுத்தி பெரும் அளவில் மானியங்கள் பெற்று வேத பாடசாலைகள் நடத்தி சமஸ்கிருத மொழியைப் பேணி வளர்த்து நாட்டு மொழிகளைப் புறக்கணித்து வந்ததும் தாமஸ்மன்றோ அவர்களால் நன்கு அறியப்பட்டிருந்தன. அவரது கல்வி விசாரணையானது பெரும்பான்மைத் திராவிட மக்களின். ஏழ்மை நிலையையும், கல்வி அறிவுஅற்ற நிலையையும் தெளிவாக எடுத்துக் காட்டியது. ஏழ்மை காரணததால் அறிவற்று வாழும் மக்களுககு எண்ணும் எழுததும் கறறுக் கொடுதது அவர்களது ஆரம்பக கல்வி அறிவை வளர்ப்பதே முதற்கடன் என்பதை அவரது கல்வி விசாரணை கூறியது. அவ்வண்ணமே செயலாற்றத் துவங்கிய மக்கள் நண்பர் மன்றோ அவர்கள் சீர்திருத்தத்தின் துவக்கக் காலத்திலேயே இவ்வுலகை விட்டு நீங்கி விட்டார். மன்றோ அவர்கள் எடுத்த கல்வி விவரங்கள் அக்காலத்திய மக்கள் கல்வி நிலையை நன்கு அறிவித்து நிற்கின்றன. சென்னை மாகாணத்தின் மொத்த மக்கட்தொகை $128\frac{1}{2}$ இலட்சமாக இருந்தது. இத்தொகையுள் 188650 மாணவர்கள் கல்விக் கூடங்களில் கல்வி பெற்று வந்தார்கள். இம் மாணவர்களில்

முகம்மதியர்கள்	13561
பார்ப்பனர்கள்	42502
வைசியர்கள்	19669
சூத்திரர்கள்	85400
மற்ற வகுபபார்	27518

ஆகக் கல்வி பயின்று வந்தனர். இந்த சாதிவாரி விவரங்களை திரு. சத்திய நாதன் அவர்கள் தமது "சென்னை மாகாணக் கல்வி சரித்திரம்(1894)'' என்னும் நூலின் கண் எடுத்துக் காட்டியுள்ளார். "மேற்கூறிய எண்ணிக்கையை தற்கால எண்ணிக்கையுடன் ஒத்திட்டுப் பார்க்கும்போது, பார்ப்பனர் இக்காலத்தில் பெறும் சலுகையை விட பெரும் அளவில் அக்காலத்தில் பெற்று வந்தனர் என்பது தெரியவரும் தோராயமாகச் சொல்வதானுல் தற்காலத்தில் கல்வி பெற்றுவருவோரில் ஏழு பேர்களில் ஒருவர் பார்ப்பனராக இருந்து வருகிறுர். பார்ப்பனரின் சாதித்தொகையோ திராவிடமக்களின் மொத்தத் தொகையில் இருபதில் ஒரு பங்கிற்கும் குறைவேயர்கும், தாமஸ் மன்றோ காலததிலோ கல்வி கற்று வந்த பாப்பனரின் எண்ணிக்கையானது நான்கு பேர்களில் ஒருவராக இருந்தது.'' இப்படியாகப் புள்ளி விவரஙகள் கூறி கல்விததுறையில் இருந்து வந்த பார்ப்பனர்களின் ஏகபோக உரிமையை மக்களது பார்வைககு வைத்து அவர் தம் சிநதனையைக் கிளறி விடுகின்றுர். மேற்கூறிய உணமைகளை யெல்லாம் தெளிவாக உணர்ந்திருந்த மன்றோ அவர்கள் பெரும்பான்மை திராவிடமக்களின் கல்வி அபிவிருத்தியில் நாட்டம் செலுத்தியதில் வியப்பில்லை.

மன்றோ அவர்கட்குப் பிறகு அவரது திட்டங்கள் சரிவர நடததப்பட வில்லை. பொதுமக்களின் கல்வியை கவனிப்பதைவிட சில குறிப்பிட்ட மேல் சாதியினரின் கல்வி வளர்ச்சியை கவனிப்பதே மன்றோவின் வழி வந்தோர்களின் நோக்கமாயிருந்தது, கிழக்கிந்திய கம்பெனி டைரக்டர்களும் இதையே விரும்பினர். மன்றோ இறநத இரண்டாண்டிற்குள் அவர்களது எணணம் மாற்றமடைந்தது. 1830-ம் ஆண்டு

எல்பின்ஸ்டோனின் ஆங்கிலக் கல்வி முறை

செப்டம்பர் மாதம் 29-ந்தேதி கடிதத்தில் அவர்களது எண்ணம் நன்கு விளக்கப் பட்டிருந்தது. "சென்னை அரசாங்கத்தின் திட்டத்தில் உயர்தரக் கல்வியை ஒரு சில பகுதியினருக்காவது புகட்டுவதற்கான முயற்சிகள் ஏதும் காணப்படவில்லை. முன்னரே நிலவிவரும் உள்நாட்டு ஆரம்பக் கல்வியை விஸ்தரிப்பதும், அதில் புதிய சீர்திருத்தம் செய்வதுமே அரசாங்கத்தின் திட்டமாக உள்ளது. சென்னைத் தலை நகரில் ஆசிரியப் பயிற்சி ஒன்று நிறுவுவதும், அப்பள்ளியில் பயிலும் ஆசிரியர்களுக்கு துவக்கக் கல்வி முறையைப் பற்றி மட்டுமே பயிற்சிக் கொடுத்து மாவட்டத் தலைமைப் பள்ளிகளுக்கும் தாலுக்காப் பள்ளிகளுக்கும் ஆசிரியர்களாக அனுப்பி வைப்பதும் திட்டமாகக் கூறப்பட்டுள்ளன. கல்வித் துறையில் முன்னேற்றமென்பது மக்களின் அறிவுத் திறனையும் நலொழுக்கத்தினையும் உயர்வடையச் செய்து சிறப்பிக்கச் செய்வதேயாகும். இப்படிப்பட்ட உயர்வான சாதனைகளை சாதிப்பதற்கு நாட்டு மக்களிடையே செல்வாக்குப் பெற்றவர்களும் ஓய்வு ஒழிவு பெற்று சுகவாழ்க்கை வாழ்கின்றவர்களும் ஆன உயர்சாதி மக்களே தகுதியானவர்களாவர். மற்றும் நமது ஆட்சி நன்கு திறமையாக நடைபெறுவதற்கு நமது அரசாங்க ஆணையின்படி விசுவாசமாக ஊழியம் புரியும் எண்ணமும் விருப்பமும் உள்ளவர்களை அடைவதில் நாம் மிகவும் அக்கரை கொண்டுள்ள உண்மையும் சென்னை சர்க்கார் அறிந்ததேயாகும். ஆனால் சென்னை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள மக்கள் கல்வி அபிவிருத்தி காரியமானது நாம் விரும்பும் தகுதியுடையவர்களை உற்பத்தி செய்வதற்கு பயன்படும் வகையில் அமையவில்லை, நமது இந்திய சர்க்கார் வங்காளத்தில் உயர்சாதி மக்கள் ஆங்கில மொழியில் மேல்நாட்டு இலக்கிய விஞ்ஞான பாடங்கள் கொண்ட உயர்தரக் கல்வி போதிக்கப்பட்டு நம் அரசாங்கம் நடைபெறுவதற்கு துணையாக நிற்கும் படிப்பாளிகளை உற்பத்தி செய்து வருகின்றனர். மத்திய அரசாங்கத்தினர் எடுத்துக் கொண்டுள்ள இம்முயற்சிகள் குறுகிய காலத்திலேயே பெரிதும் வெற்றி பெற்றுள்ளன. இந்திய மக்களிடையே ஐரோப்பிய நாகரீக பழக்கவழக்கங்களையும் எண்ணங்களையும் பரவச்செய்வதற்கு இவ்வெற்றிகள் உறுதுணையாகுமென நம்புகிறோம். இப்படிப்பட்டக் காரியங்களை சென்னை மாகாணத்தில் மேற்கொள்ள விழைகின்றோம்.' கம்பெனி டைரக்டர்கள் தெரிவித்துள்ள இக்கருத்துக்கள் மன்றோவின் மக்கள் கல்வித் திட்டத்தை உடனே விழுங்கி விடவில்லையானாலும் 1836-ல் மன்றோவின் திட்டம் கைவிடப்பட்டது. உயர்சாதி வகுப்பினரே கல்வி பெறுவதற்குத் தகுதி பெற்றவர் எனக் கருதப்பட்டு அவர்களுடைய கல்வி முன்னேற்றத்தில் கருத்து செலுத்தப்படத் துவங்கியது. இப்படியாக மக்கள் கல்வி முன்னேற்றம் தடைபடக் கம்பெனி டைரக்டர்கள் காரணமாக நின்றது ஏன்?

முதலாவது காரணம் மன்றோ அவர்களின் திட்டப்படி நிறுவப்பட்ட மாவட்டத் தலைமைப் பள்ளிகளையும் தாலூக்காப் பள்ளிகளையும் நல்லமுறையில் நடத்தி முன்னேற்றமடையச் செய்யாமல் மங்கிவரும்படி திராவிட மக்கள் விட்டுவிட்டனர். தேடாது தம்மை நாடி வந்த அரியதொரு வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள தவறிவிட்டனர் திராவிடர். பொது மக்கள் கல்வி முன்னேற்றத்தை விரும்பாத சில சுயநலவிருப்ப உயர்சாதிக்காரர்கள் பொதுமக்கள் கல்வி ஸ்தாபனங்களின் வீழ்ச்சியில் கண்ணும் கருத்துமாயிருந்தனர். இரண்டாவதாக கிழக்கிந்திய கம்பெனியார் தமது ஆங்கில ஆதிக்கத்தை இந்தியாவில் உறுதியாக நிலைநாட்டிக் கொள்வதற்கான எண்ணத்தில் இருந்தனர். இவ்வெண்ணத்திற்கு உயர்சாதிக்காரர்களை பட்டம் பதவி கொடுப்பதன் மூலம் துணையாகச் சேர்த்துக்கொள்ள விரும்பினர். மற்றும் அதிக செலவு செய்து இங்கிலாந்திலிருந்து ஊழியர்களை அனுப்ப கம்பெனியார் விரும்பவில்லை. தமக்குப் தேவைப்பட்ட ஊழியர்களை இந்தியாவிலேயே தயார் செய்து கொள்வதே சிக்கனமுடையதென நினைத்தனர். அதற்காக பணம் படைத்தோர், உயர் சாதியாளர், ஆகியோரின் கல்விவளர்ச்சியை ஆதரிக்க முன்வந்தனர். இந்திய உயர்சாதி மக்களும் பணக்காரர்களும் இந்தியாவில் ஆங்கில ஆட்சியே இனி நிலைபெற்ற ஆட்சியாக விளங்கும் என்னும் உண்மையை உணர்ந்து ஆங்கில ஆட்சியில் உத்தியோகம் வகித்து சீர் சிறப்புப் பெற பிழைத்தனர். ஆங்கில மொழி பயில்வதிலும் அவர்களது நாகரீகத்தைப் பின்பற்றுவதிலும் ஆர்வம் காட்டினர். மூன்றாவதாக லார்ட் மெக்காலே அவர்களின் தீர்ப்பானது 2835-ம் ஆண்டில் இந்தியா முழுவதற்கும் ஆன முடிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு கல்வி முறையில் மாற்றம் செய்யப்பட்டது. ஆகவே மக்கள் கல்வித் திட்டம் கவனிக்கப்படாமல் போய்விட்டதற்கு ஒரு சாரார் மட்டுமே காரணமாக நிற்கவில்லை என்பதும் பல சூழ்நிலைகளும் சேர்ந்தே மக்கள் கல்வி வளர்ச்சிக்கு எதிர்ப்பாயிருந்ததென்பதும் தெரியவரும்.

மத்திய சர்க்காரின் உத்திரவுப் படி 1836-ல் எல்லா தாலுக்கா மாவட்டப் பள்ளிகளும் நிறுத்தப்பட்டன. கல்வி அபிவிருத்தியை கவனிப்பதற்கு புதிய கல்விக் கமிட்டி ஒன்று நிறுவப் பட்டது. இப்புதிய கமிட்டி உடனடியாக நான்கு ஆரம்பப் பள்ளிகளை துவக்க விரும்பியது. ஆனால் சர்க்கார் அதனை நிறைவேற்ற வில்லை. 1839-ல் லார்ட் எல்பின்ஸ்டோன் அவர்கள் சென்னை கவர்னராக வந்த பின்னரே கல்வித் துறையில் முன்னேற்றம் ஏற்படத் துவங்கியது.

சர் தாமஸ் மன்றோவைப் போலவே எல்பின்ஸ்டோனும் கல்வித் துறையில் அக்கரை கொண்டவர், மேல்நாட்டு நவநாகரீக விஞ்ஞானக் கல்வியை இந்திய மக்களிடையே பரவச் செய்ய வேண்டும் என்ற கருத்துக்கொண்டவர். இவர் சென்னை கவர்னராக பதவி ஏற்றவுடன் தானே ஒரு புதிய கல்வித் திட்டத்தைத் தயாரித்தார். இவர் திட்டத்தில் நாட்டுக் கல்வி முறையை வளர்க்கும் வழி வகைகள் எதுவும் இடம்பெறவில்லையானாலும் அந்நாட்டுக் கல்வி முறையை அழிப்பதற்கான முயற்சியும் செய்யப்படவில்லை என்பது தெரிய வேண்டியதாகும். மத்திய கல்லூரி ஸ்தாபனம் அல்லது பல்கலைக் கழகம் ஒன்று நிறுவி நாட்டின் உயர்தர வகுப்பு மக்களின் கல்வி நிலையை உயரச் செய்வது என்பது அவரது திட்டத்தில் முதலிடம் பெற்றிருந்தது. திருச்சி, மசூலிப்பட்டினம், பெல்லாரி, கள்ளிக்கோட்டை ஆகிய இடங்களில் ஜில்லாப் பள்ளிகள் துவக்குவதும், இவைகளில் ஆங்கில மொழியில் கல்வி பயிற்சிக் கொடுப்பதும் இரண்டாவது இடம் பெற்றிருந்தது. புதிதாக ஏற்படுத்தப் பட்டிருந்த உள்நாட்டுக் கல்விக் கமிட்டியை கலைத்து பல்கலைக் கழகக் குழு ஒன்று நிறுவுவது மூன்றாவது இடம் பெற்றிருந்தது.

இவரது திட்டத்தைப் பார்வையிட்ட கிழக்கிந்திய கம்பெனி டைரக்டர்கள் நாட்டுக் கல்விமுறையை வளர்ப்பதற்கு இடமில்லாததைப் பற்றி வருத்தம் தெரிவித்தனர். ஜில்லாப் பள்ளிகளை சிறிது காலந் தாழ்த்துத் துவக்கலாம் எனவும் யோசனை கூறினர்கள். எல்பின்ஸ்டோன் திட்டப்படி 1840 ல் பல்கலைக் கழக போர்டு ஒன்று நிறுவப் பட்டது. அரசாங்க உலகில் புகழ் வாய்ந்தவரும், பச்சையப்பன் கல்லூரி ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவருமான ஜியார்ஜ் நார்ட்டன் என்பார் தலைவராக நியமிக்கப்பட்டார். இந்த போர்ட் "சென்னைப் பல்கலைக் கழகம்" என்ற ஒரு உயர்தரக் கல்லூரியை 1841-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ந்தேதி புதன்கிழமை காலையில் துவக்கி வைத்து பெருமை யடைந்தது. இந்த "சென்னைப் பல்கலைக் கழகம்" என்ற உயர்தரக் கல்லூரியானது பின்னர் 1857-ம் ஆண்டு செப்டம்பர் 5-ந் தேதி இந்திய சட்டப்படி அசல் பல்கலைக் கழகமாக இணைக்கப்பட்டது. இப்பல்கலைக் கழகத்திற்கான "செனட் சபை"யும் அதே ஆண்டில் நியமிக்கப் பட்டது, பல்கலைக்கழக துவக்க விழாவானது காலேஜ் மண்டபத்தில் கவர்னர் லார்ட் எல்பின்ஸ்டோன் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. சென்னைப் பல்கலைக்கழகம் துவக்கப் படுவதின் நோக்கத்தை ஜியார்ஜ் நார்ட்டன் விரிவாக எடுத்துரைத்தார்.

இந்த பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியானது நாட்டின் உயர்தர மக்களின் ஒத்துழைப்பைப் பொறுத்துள்ளது— இந்நாட்டுப் பெருநிலக் கிழார்களின் ஆதரவை இந்த ஸ்தாபனம் எதிர் பார்த்து நிற்கிறது. இந்தப் பல்கலைக் கழகத்திற்காகும் செலவில் ஒரு பகுதியை சர்க்கார் ஏற்க முன்வந்துள்ளனர். இப்பல்கலைக் கழகத்தில் மேல்நாட்டு உயர்தரக் கல்வி முறைகளும், விஞ்ஞான கருத்துக்களும், இலக்கியங்களும் போதிக்கப்பட்டு மாணவர்களின் கல்வித்தரம் உயர்தரமானதாகச் செய்யப்படும். தகுதியும் திறமையும் உள்ளவர்கள் எந்த வகுப்பினராக யிருந்தாலும் இப்பல்கலைக் கழகத்தில் சேர்த்துக் கொள்வது புறக்கணிக்கப்படாது. இந்த ஸ்தாபனமானது ஓய்வும் ஒழிவும் செல்வமும் உள்ள உயர்தர வகுப்பு மக்களின் கல்விப் பயிற்சிக்கான எல்லா

சென்னை பல்கலைக் கழகம்—பிரசிடென்சி — என்ஜினியரிங் கல்லூரிகள் வரலாறு.

வசதிகளையும் செய்து கொடுக்க முனைந்துள்ளது. இந்த ஸ்தாபனம் துவக்கப் படுவதின் நோக்கமே இதுதான். இந்த நாட்டு அரசாங்க அலுவல்களில் பணியாற்றுவதற்கான திறமையானவர்களை தயாரிப்பது. அரசாங்க உத்தியோகங்களில் உள்நாட்டு மக்களும் கணிசமான அளவு இடம்பெற வழிவகுப்பது, நவீன வாழ்க்கை முறையை பின்பற்றி மேல் நாட்டு நாகரீகத்தை வளர்ச்சியடையச் செய்வது, மேல்நாட்டுக் கல்வி பயின்று நாட்டின் அந்தஸ்தை உயரச் செய்வது, இப்படியாக திரு நார்ட்டன் அவர்கள் எடுத்துக் கூறியதினின்றும் எல்பின்ஸ்டோன் அவர்களுடைய எண்ணத்தையும் செய்கையையும் நன்கு புரிந்து கொள்ளலாம், லார்ட் மெக்காலேயின எண்ணத்தை அப்படியே பிரதிபலித்தார் லார்ட் எல்பின்ஸ்டோன் என்பதை சுலபமாக புரிந்து கொள்ளலாம்.

லார்ட் எல்பின்ஸ்டோன் அவர்கட்கு பின் மார்க்விஸ் ஆப் ட்வீடில் என்பார் சென்னை கவர்னராக வந்தார். அவர் கல்வி ஸ்தாபனங்களில் கிருஸ்துவ பைபிள் வேத பாடத்தை கட்டாய பாடமாகச் செய்ய விரும்பினார்? ஆனால் அவர் விருப்பம் நடைபெறவில்லை. கம்பெனி டைரக்டர்களும் எதிர்த்தனர். இவர் காலத்தில் நாட்டுக் கல்விமுறையில் குறிப்பிடத் தக்க மாற்றமோ முன்னேற்றமோ எதுவும் ஏற்படவில்லை.

1848-ம் ஆண்டில் சர் ஹென்றி போட்டிங்கர் என்பார் சென்னை கவர்னராக வந்தார். அவர் உயர்தரக் கல்விக்கே முதலிடம் கொடுத்தார். நாட்டு மொழிக் கல்வியை அலட்சியம் செய்தார். அவரது செய்கையை மிஸ்டர் தாமஸ் எனும் அறிஞர் முதலியோர் எதிர்த்தனர். பொதுமக்கள் கல்வியை வளர்ப்பதும், உள்நாட்டு மொழிப் பள்ளிகளை ஆதரிப்பதும் மக்களின் முன்னேற்றத்திற்கு உகந்ததாக இருக்கும் என எடுத்துக் காட்டினர்,

1854-ம் ஆண்டு சார்லஸ்வுட் அவர்களின் கல்வி அறிக்கை கிடைப்பதற்கு முன்னர் திராவிட நாட்டின் கல்வி நிலையை சுருக்கமாகக் கூறுவோம்.

மாகாண, ஜில்லா தாலுக்காப் பள்ளிகள் : கும்பகோணம், பெல்லாரி, கள்ளிக்கோட்டை, ராஜமந்திரி ஆகிய நகரங்களில் மாகாணப் பள்ளிகள் நடந்து வந்தன, சித்தூரிலும் சேலத்திலும் இரு ஜில்லாப் பள்ளிகள் புதிதாக ஏற்படுத்தப் பட்டன. கடலூரில் நடந்து வந்த மாகாணப் பள்ளியானது ஜில்லாப் பள்ளியாக மாற்றப்பட்டது. சுமார் 100 நாட்டு மொழிப் பள்ளிகள் தாலுக்கா தலை நகர்களில் நிறுவுவதற்கு திட்டம் வகுக்கப்பட்டு 1853–54-ல் 20 க்கு மேற்பட்ட பள்ளிகள் நிறுவப்பட்டன; வடசர்க்காரில் மலைசாதியினருக்காக சில பள்ளிகள் நிறுவப்பட்டன. மலைச்சாதியினரான கோண்டர்களின் முன்னேற்றத்திற்கு சர்க்கார் பாடுபட்டனர். லெப்டினன்ட் மாக்டனல்ட் மிகவும் பாடுபட்டவர். இவர் பின்னர் கல்வி இலாக்கா டைரக்டராக இருந்தவர். அவர்களிடையே பழக்கத்திலிருந்து வந்த நர பலியைத் தடை செய்து அவர்களை நாகரிக மக்களாக வாழும்படிச் செய்தனர் ஆங்கில சர்க்கார்.

சென்னை மெடிகல் காலேஜ்:

1835-ம் ஆண்டில் நிறுவப்பட்ட வைத்தியப் பள்ளியானது 1851-ல் வைத்திய கல்லூரியாக உயர்த்தப்பட்டு பின்னர் சென்னை மெடிகல் காலேஜ் என விரிவாக நடத்தப்பட்டு புகழடைந்தது.

என்ஜினியரிங் காலேஜ்:

1844-ம் ஆண்டில் சர்வே பள்ளிக்கூடம் என்றொரு பயிற்சிப் பள்ளிக்கூடம் நிறுவப்பட்டது; இதில் சர்வே துறைக்கான மாணவர்கள் சேர்க்கப்பட்டு பயிற்சி கொடுக்கப்பட்டு வந்தனர். இந்த சர்வே பள்ளிக்கூடந்தான் பின்னர் என்ஜினியரிங் காலேஜ் ஆக விரிவடைந்தது.

சித்திர—தொழிற்கலைப் பள்ளிகள்:

டாக்டர் ஹண்டர் என்பார் சர்ஜனாக இருந்த காலத்தில் சித்திரக்கலைப் பள்ளி ஒன்றையும் தொழிற்கலைப் பள்ளிக்கூடம் ஒன்றையும் முறையே 1850லும் 1851லும் நிறுவினர். இவைகளை நிறுவப்படுதற்கு அவர் எடுத்துக் கொண்ட சிரமம் மிகப்பெரிது. இவ்விரு ஸ்தாபனங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு சர்க்கார் ஸ்தாபனமாக பணியாற்றி வந்தது, இதற்கு டாக்டர் ஹண்டர் அவர்களே தலைமை ஆசிரியராக அமர்ந்தார், —தொடரும்

—திராவிடப்பித்தன்

ராகுவேல் - ராணி அம்மாள்

19—6—55 ஞாயிறு காலை 8-30 மணிக்கு மாதவரத்தில் தோழர் ராகுவேல் தோழியர் ராணி அம்மாள் ஆகியோருக்கு தோழர் எ. ஜெயராஜ் தலைமையில் சீர்திருத்த திருமணம் நடைபெற்றது.

மணமக்களைப் பாராட்டியும், சீர்திருத்தத் திருமணம் என்பது பற்றியும் தோழியர் தேசியமணி தோழர்கள் மு. கிருஷ்ணமூர்த்தி, மா. பொ. வேதாசலம், மதிவாணன், எம். ஈ. பாண்டியன் ஆகியோர் பேசினர்.

இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூ. 1. அளிக்கப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி.



தொடரும் கதைக்கு நினைவாக...!

தேவதாஸ் எங்கே?

அமுதாவைக் கண்ணீர்க் கோட்டைக்குள்ளே கைதியாக்கி வைத்துவிட்டு எங்கோஓடிவிட்ட நர்மதாவின் அருமைத் தம்பி தேவதாஸ் வரவேயில்லை. சிதம்பரம் நாதமணியின் வாக்குமூலம் ...தேவதாஸை கொலைகாரனுக்கி வைத்திருந்தது. போலீஸார் வலை வீசிக் கொண்டிருந்தனர். நிலைமையை விளக்கிக் கடிதமெழுதியிருந்தாள் அமுதா நர்மதாவுக்கு! ...ஓய்வு கிடைத்ததும் நர்மதா சிதம்பரத்துக்குப் பறந்தாள்.

*

36

மலைச்சாரலின் ஓரத்திலே குள்ள உருவமும் குமரியும் சிரித்துக் கொண்டிருந்த நேரத்திலே—அழுதுகொண்டிருந்த ரயிலை விட்டு சிதம்பரத்திலே நர்மதா இறங்கினாள். காற்றோடு கலந்தாடிய கேசத்தைக் கைக்குட்டையால் அழுத்திப் பிடித்துக்கொண்டே நிலயத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தாள். கையோடு கையாக ஒட்டிக் கிடந்த பச்சை நிற ஜாக்கெட்டும்......மல்லிகைக் கலர் சேலையும் நர்மதாவின் இயற்கை அழகுக்கு எடுப்பாக மெருகேற்றி வைத்தது. கால்களை முத்தமிட்ட சிலோன் பாதரட்சைகள் மயில் நடைக்கு ஒயிலைச் சேர்த்து வைத்தது. அவள் லாவகமாக இடது கரத்திலே பிடித்திருந்த 'மெயில்' அவளின் இதயப் படபடப்பைப் போலத் துடித்துக் கொண்டிருந்தது.

நடந்து வரும் சிங்காரத்தை நிலயத்திலே அங்குமிங்குமாக நடமாடிய கழுகுக் கண்கள் படம் பிடிக்காமல் போகவில்லை! நெற்றியிலே பட்டையும், வயதிலே ரயில் எஞ்சினையும்விட கிழடுதட்டியவருமான 'ஸ்டேஷன் மாஸ்டர்' கிச்சுகூட ஓரப்பார்வையால் போஸ் கொடுத்தார் என்றால் சாமானியர்களைப் பற்றிக் கூறவா வேண்டும். தில்லைக்கு இறக்குமதியான புதிய பக்தையென்று அவளையும் எண்ணிவிட்டார்களோ என்னவோ? மலரைச் சுற்றி வண்டு ரீங்காரமிடுவது போல அவளைச் சுற்றித் தில்லையின் தெளிந்த நெஞ்சர்கள் உலவினார்கள்.

அந்த வேதனை விளையாட்டைக் காணக்காண நெஞ்சம் கசந்தது நர்மதாவுக்கு. ரயில் நிலயமென்றாலே அது எந்த ரயில்நிலயமாக இருந்தாலும், ஊருக்குப் பத்து ரெக்ரூட்டுகள் இப்படித்தான் ராஜநடை போட்டு உலவிக் கொண்டிருக்கிறார்களே! ரயில்வே அதிகாரிகள் இதை கவனித்தும் கவனியாதது போலத்தான் நடந்து கொள்ள முடிகிறது. ரயில்வே சிப்பந்திகளிலே சிலர் கூட இதுமாதிரியான அசடுதட்டிப்போகிற நிலைமைக்கு ஆளாகிவிடும்போது அதிகாரிகள் பார்த்தும் பாராதவர்களாகத்தான் ஆகித்தீருகிறார்கள். கையிலே சிகரெட்டோடும், தூக்கிவிட்ட காலரோடும் கம்பீர நடை நடந்து நிலயத்தைக் காலால் அளக்கும் அந்த மன்மதக் குஞ்சுகளிடம் புதுக் குயில்கள் ஓடோடி வந்து கொஞ்சிக் குலவுமென்ற நினைவு அலைமோதும் காரணத்துக்காக அவர்கள் அப்படி நடந்துகொள்கின்றனரோ என்னவோ!

...காலத்தை ஏமாற்றும் இந்த ஜாலக்காரர்களைக் கண்டபோது வெறுப்போடு கைக்குட்டையால் முகத்தை மறைத்துக் கொண்டே பாதையைக் கடந்து போனாள் நர்மதா.

காலைத் தூக்கி ஆடிய நடராசரின் கோயிலிலே பக்தர்கள் கையைத் தூக்கி யடித்துக் கொண்டிருந்த மணியின் ஓசை காற்றோடு கலந்து மிதந்து வந்து கொண்டிருந்தது. தேவஸ்தான நாதஸ்வரக் கோஷ்டி மேளதாளத்தோடு திறமையைக் காட்டிக் கொண்டிருந்தது அந்த 'கோர' இசை கோயிலின் நீண்ட மதில்சுவரிலே மோதி எதிரொலித்துக் கொண்டிருந்தது. அகிலத்துக்கெல்லாம் ஜோதியைத் தரும் நடராசருக்கு... ஆயிரம் பவர் பல்பைப்போட்டு ஒளி ஏற்றி வைத்தார்கள். ஆண்டவன் தான் கண்ணை மூடி யிருந்தாலும்—திறந்திருந்தாலும் நம்மைப் பார்த்துக் கொள்ளுகிறான். பக்தர்களென்ன திருஞானிகளா? இருண்ட அறைக்குள்ளே யிருந்த பகவானைப் பார்க்க பக்தர்களுக்கு ஒளி தேவைப்பட்டது. எந்தெந்த நேரத்தில் எதெது தேவையோ அதைச் செய்யத்தான் தில்லைவாழ் அந்தணர்களை பிரம்மன் சிருஷ்டித்திருக்கிறாரே! அவர்களென்ன வெறும் சோற்றாலடித்த பிண்டங்களா என்ன! புளியோதரையையும் பொங்கலையும் பானை வயிற்றிலே...இல்லை இல்லை...பாழும் வயிற்றிலே கொட்டிக் கொண்டு புவனுவுக்கோ, புஷ்பாவுக்கோ கால் பிடித்துக் கொண்டிருப்பதா அவர்கள் வேலை! அவர்கள் படும் பாடு யாருக்குத் தெரியும்?

தேவ சேவையிலே போட்டி போட்டுக் கொண்டல்லவா நீ முந்தி—நான் முந்தி யென்று ஓடியாடிப் பாடுபடுகிறார்கள். சில மாதத்துக்கு முன்கூட இந்த சேவைப் போட்டி நடந்ததே 'அவாளுக்குள்ளேயே!' தில்லை தீட்சதர் இருவர் 'நான்தான் தேவசேவை செய்வேன்—இல்லை நான்தான் தேவசேவை செய்வேனென்று போட்டி போட்டுக் கொண்டு, கோயில் மூலஸ்தானத்துக்கு முன்னாலேயே கட்டிப் புரண்டதோடு மட்டுமல்லாமல்... வெங்கலப் பானையால் மண்டையில் அடித்துக் கொண்டனராம். அதிலே ஒரு தீட்சதருக்கு ரத்தக் காயமே ஏற்பட்டு விட்டது. நிலைமை இப்போது சென்னைக் கோர்ட்டுக்கே 'விசாரணை'க்கு வந்து விட்டது. ஆண்டவனுக்கு சேவை செய்வதிலே எவ்வளவு போட்டியும், ஆர்வமும் அவாளுக்குப் பொங்கிக் கொண்டிருக்கிறது பார்த்தீர்களா? இவர்களல்லவா தியாகிகள்! சொந்தநலம் பாராது சேவை செய்யத் துடிப்பதிலே எவ்வளவு படபடப்பு! ஆண்டவன் தின்னது போக மீதமுள்ள பொங்கலை வெங்கலப்பானையிலே தாங்கி வந்த தீட்சதர் பொங்கலையும் ஒரு பொருட்டாக மதிக்காமல் எதிரே வந்த பட்டரின் மீது குலைத்துப் பாய்ந்து தலையில் பானையால் அடித்தாரே சேவைக்கு உரிமை கோரி, இவர்தான் தில்லை வாழ் அந்தணரிலேயே புடம் போட்டு எடுக்கப்பட்டவர். பார்ப்பனருக்குவீரமில்லையென்று கூறுவோர் தில்லையிலே நடந்த ரத்தக்களரியைப் பார்த்துவிட்டுக் கூறட்டும். தீட்சதருக்கு தீட்சதரே தீப்பொறி பறக்கும் 'போர்' செய்தனரென்றால், மற்றவர்களிடம்......!

நினைக்கவே பயமாயிருக்கிறது...! அவர்களென்ன பச்சைத் தமிழனைப்போல தொடை நடுங்கிகளா? போஸ்டர் போட்டதற்கே என்ன போடு போட்டார்கள். இந்துவும் சுபஜாதி மித்திரனும் கர்ஜனை புரிந்ததே கர்ஜனை. பச்சைத் தமிழன் வெட்டிப் பாம்பாகிவிட்டாரே! எங்கோ ஒரு மூலையிலே யிருந்து கொண்டு... பாதாளலிங்கம் குகையைத்திறந்த ரமண சிஷ்யர் அறிக்கைமேல் அறிக்கை எழுதித் தள்ளுகிறார். சர்க்கார் எவ்வளவு நடுநடுங்குகிறது. பி.வி. ஜி. இயக்கம் என்ன பாடுபடுகிறது. க்ஷபரோகம் இறைவன் தரும் வரப்பிரசாதம்... அதைத் தடுக்க ஊசி குத்துவதா? இறைவனின் இதயக் கருத்துக்கு தடுப்பு முறையா?...இந்த நிலை இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் கண்ணிழந்த சரோஜாக்களை சாட்சியாக காட்டுகிறார் ராஜரிஷி!

பி. வி. ஜி. ஊசி குத்துவதென்ன...சூரிய கிரகணத்தைப் பார்ப்பது போன்றதா கண் போய் விடுவதற்கு என்று கிண்டல் செய்கிறார்களே! அந்த மகானுக்கென்ன தெரியாதா? வான்கோழி வாபஸ் வீரர்தான் உலகமேதையாயிற்றே! காலம்...... ஆமாம் கெட்ட காலம்தான் இப்படி அவரின் மூக்கை உடைத்து வைக்கிறது.

கோயில் யானையின் பிரதிபிம்பமான தில்லை தீட்சதர்கள் போராடிய அந்தச் சிதம்பர நாதர் ஆலயம் குதிரை வண்டியிலிருந்த நர்மதாவுக்கு நன்றாகத் தெரிந்தது. ஆடிய பாதத்தின் அழகைக்காண ஆயிரமாயிரமவர் தங்க ஓடு வீட்டைத் தேடி ஓடோடிக் கொண்டிருந்தனர். பாதையில் நகர்ந்த பக்தர் கூட்டத்தை ஒதுக்கிக் கொண்டு குதிரை வண்டி ஆலய வீதியை தொட்டுவிட்டு ஆடிக் கொண்டே நின்றது.

வாசலில் வந்து நின்ற வண்டியைப் பார்த்ததும் ஓடோடி வந்தாள் அமுதா. குதித்திறங்கிய நர்மதாவைப் பார்த்ததும் குமரி அமுதாவின் இதயம் துள்ளிக் குதித்தது. கரத்தோடு கரம் சேர்த்து நெஞ்சோடு நெஞ்சு கலந்து அணைத்துக்கொண்டாள் நர்மதா அமுதாவை!

வீட்டினுள்ளே அடியெடுத்து வைத்தாள் நர்மதா. அறையின் முன்பகுதிச் சுவற்றிலே மாட்டப்பட்டிருந்த தேவதாஸின் புகைப்படம் அவளின் நினைவைத் தட்டிவிட்டது. நீண்ட பெருமூச்சோடு அமுதாவின் பஞ்சுக்கரத்தை அழுத்திப் பிடித்தாள். தத்தளித்த உள்ளங்களுக்கு அந்த 'அழுத்தம்' ஒரு அமைதியைத் தந்தது!

(தொடர் கதை)

திராவிட இசைக்குயில் தோழியர் செல்வா

பகுத்தறிவுக் கொள்கைகளை நாடகத்தின்மூலம் பரப்பி பணியாற்றி வரும் நடிகமன்னன்—பி. எஸ். கலைத்தூதன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் திராவிட இசைக்குயில் பி. எஸ். செல்வா அவர்களுக்கு 12—6—55 ஞாயிறு அன்று பெண்மகவு பிறந்திருக்கிறது. தாயும் சேயும் நலம்.

மார்ஷல் புல்கானின்...தொடர்ச்சி

சோவியத் நிறுவனம் ஒன்று உடன்பாடு செய்து கொண்டதே என்பதை எண்ணி எண்ணி வருந்துவார்! அந்த பிர்லாவின் தொழிற்சாலையினது நிர்மாணம் சோவியத் என்ஜினியர்களின் கண்பார்வையிலா நடைபெற ஏற்பாடாயிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து ஏங்கத்தான் செய்வார்! பொதுவுடைமையின் கேந்திரமாம் ரஷ்யாவிலிருந்தா இந்திய முதலாளித்துவத்துக்கு உதவி கிடைக்கின்றது என எண்ணிப் பார்த்துவிட்டு இந்திய மண்ணை விட்டுத் திரும்ப வேண்டும்.

இந்திய கம்யூனிஸ்டுகளுக்கு உண்மையிலேயே இந்திய மக்களின்பால் குறிப்பாக தென்னாட்டு வளத்தில் வாழ்வில் அன்பும் அபிமானமும் உண்டென்றால், புல்கானின் இந்தியாவுக்கு வந்தால் எந்தெந்த பகுதிகளைக் காணவேண்டும்—என்னென்ன பிரச்னைகள் பற்றி ஆராய வேண்டும் என்பதற்கோர் திட்டம் தயாரித்து, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி காரியதரிசி குருஷேவ் அவர்களுக்கு அதனை அனுப்பி அவர் வாயிலாக அத்திட்டத்தை புல்கானின் பார்வைக்கு சமர்ப்பிப்பார்களா? அல்லது இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் ரஷ்யாவுக்கு சென்று திரும்பியதைப்போல ரஷ்யப் பிரதமர் இந்தியாவுக்கு வருகை தந்தார் என்ற சம்பிரதாய கூப்பாட்டில் ஈடுபடுவார்களா என்பதே நமது கேள்வி?

புரட்சிக் கவிஞர்

சென்ற வாரக் குறிப்பு

O

விட்மன் மனச் சோர்வுடன் தன் வாழ்நாட்களோடு போராடிக் கொண்டிருக்கிறான். இங்கிலையில் தான் இயற்றிய 'புல்லின் இதழ்கள்' என்ற கவிதையின் வெற்றியையும் எதிர்பார்த்திருந்தான்.

நரகமெனும் பூச்சாண்டி எனக்குத் தூசி சுவர்க்கம் எனும் மாயவலை எனக்குச் சாதாரண அணு

ஆனால் அப்புத்தகத்தை வாங்க யாரும் முன்வரவில்லை. புல்லின் இதழ்களா! புல்லன் எதனுவது எழுதியிருப்பான்!' என்று அதைப்படிக்காமலே கேலிதான் பேசினர். வாங்கிய இரண்டொருவரும் வசைமொழிகளைத்தான் பாராட்டுரைகளாக வீசினர். காரணம் அக்கால முறையை ஒட்டி அப்புத்தகம் அமையவில்லை. பொன்னுடைக்குள் புகுந்திருப்போரின் எழுத்துக்களும், மின்னும் அட்டைகளுடைய ஏடுகளும் தான் அன்று புத்தகங்களாக மதிக்கப்பட்டன.

தவிரவும் வழக்கமான இலக்கண வரம்பையொட்டி அவன் கவிதைகள் இயற்றவில்லை. 'கவிஞன் சீர், தளைகட்கும் எதுகை மோனைக்கும் கட்டுப்பட்டவனல்லன். சொல்விதிக்கும் யாப்பிற்கும் இலக்கணத்திற்கும் கூட அவன் அடிமையல்லன். அவன் அவற்றின் தலைவன், கருத்தின் முதல்வன்—என்ற கருத்தின் உருவமான விட்மான், தன் கவிதைகளை தன் எண்ணப்படியே எழுதியிருந்தான். அவை அக்கால மக்களுக்கு —அங்கு புதிதாகக் குடும்பமமைத்துக் கொண்டிருந்த சமுதாயத்திற்கு அடியோடு புரியவில்லை. அவன் கவிதைகளைத் தவறு என்று கூடக் கருதினர்.

மேலும் அவன் கவிதைகளிலே பழக்கமான பண்டைப் பெருமையும் பாவாணின் அருமையும், தலைவர்களின் திறமையும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கவில்லை. இயற்கையின் அழகையும் ஏழைகளின் துயரையும், மனித நம்பிக்கையும், ஜனநாயகத்தின் மாண்பையும் விளக்கும் கருத்துக்கள்தான் அரசோச்சின.

தத்துவ நூல்களைவிட என் சாளரத்தருகே பூக்கும்— காலைக் காந்தி எனக்கு அதிக மகிழ்ச்சி தருகிறது !

அப்புதிய அமைப்பு முறையும் கருத்துக்களும் அவர்களுக்கு விளங்காமற் போகவே, அவை எளிதில் மக்கள் இதயங்களிலே இடம்பெற முடியவில்லை பழமையைப் பிளந்து கொண்டு எழும் புதுமைக்கு எப்பொழுதுமே எதிர்ப்பு அதிகமாகத்தான் இருக்கும் என்பதை நல்லுணர்ந்த விட்மன் கவலையேதும் கொள்ளாது அந்நூல்களின் சில பிரதிகளை பல அமெரிக்க நூலாசிரியர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் அனுப்பிவைத்தான். ஆனால் நேர்மையான விமரிசனத்தையும் பாராட்டையும் எதிர் நோக்கிய அவனுக்கு அங்கும் கண்டனப் புயல்தான் பரிசாகக் கிடைத்தது.

பழமைக் குட்டையிலே ஊறிய அவ்வமெரிக்க நூலாசிரியர்கள் அப்புத்தகத்தைப் பற்றிக் கண்டபடி இழிவான முறையிலே எழுதி அவனுக்கே திருப்பியனுப்பிவிட்டனர். பத்திரிகைகளும் அவர்கள் எண்ணத்தையே பிரதிபலித்துப் பலமாகக் கண்டித்து எழுதின— ஏறத்தாழ இரண்டாண்டுகள்வரை இந்நிலை நீடித்தது.

எனினும் விட்மன் மனம் குன்றவில்லை. அதற்குக் காரணம் அக்கால அறிஞர்களில் மிகவும் சிறந்து விளங்கிய (ரால்ப் வால்ட்) 'எமர்சன்'தான்! விட்மன் அவருக்கும் மதிப்புரைக்காகப் புத்தகத்தை அனுப்பியிருந்தான். அதைப் படித்து ரசித்து மகிழ்ந்த அவர் அவன் கவிதைகள் உண்மையில் மிக உயர்தனவென்றும், எதிர்காலத்தில் அவன் தலைசிறந்த கவிஞனாகப் போகிறான் என்றும் உளம் திறந்து அவனைப் பாராட்டி எழுதியிருந்தார். விட்மனுக்கு அவர் ஒருவர் கருத்தே உலகத்தின் மதிப்புரையாகத் தோன்றியது. அவன் மகிழ்ச்சியை மேலும் அதிகரிக்கும் முறையிலே 'நார்த் அமெரிக்கன் ரெவ்யூ' என்ற பத்திரிகை அவன் கவிதைகளை நல்லமுறையிலே விமர்சரித்து பாராட்டி எழுதியது.

அளவில்லாத பூரிப்படைந்த விட்மன், எமர்சனின் பாராட்டுரைகளோடு புல்லின் இதழ்களை மற்றொரு பதிப்பு வெளியிட்டான். அறிஞனின் ஆசி பெற்றும் அப்புத்தகம் ஓராண்டில் ஐம்பதே பிரதிகள்தான் விற்பனையாயின வாம்! சிறுதுளி பெருவெள்ளமாவதைப் போல, மெதுவாக அவன் கவிதைகள் மக்கள் மத்தியிலே இடம் பெற ஆரம்பித்தன. 1860-ல் 'புல்லின் இதழ்கள்' 154 பாடல்களுடன் மூன்றும் பதிப்பாக வெளியாகியது. செல்வாக்கு மலையின் படிகளிலே ஏற, ஏற அவன் கவிதைகள் எங்கும் பரவி, மேலும் பல கவிதைகளோடு புல்லின் இதழ்கள் மேலும் பல பதிப்புகளுக்கு உள்ளாயிற்று. அது மட்டுமல்ல, வேற்று நாட்டவரையும் அவன் கவிதைகள் கவர—அவை பல் வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படத் துவங்கின.

இந்த நேரத்தில் அமெரிக்காவில் ஒரு பெரும உள்நாட்டுப் போர்கிளம்பியது. அடிமைகளுக்குச் சுதந்திரமளிக்க மேற்கு வர்ஜீனியாவிற்கும் அடிமைகளை அடிமைகளாகவே வைத்திருந்த கிழக்கு வர்ஜீனியாவிற்குத்தான் (1861-ஏப்ரல் சண்டை எழுந்தது. போர் அடிமை விவகாரத்தைப் பற்றியதாக விருந்தாலும், அது அப்பொழுதுதான் முடியரசுத் தலைவராகத் தெரிந் தெடுக்கப்பட்டிருந்த ஆப்ரகாம் லிங்கனை' எதிர்த்தே ஏற்பட்டதாகக் கருதப்பட்டது. இந்த நெருக்கடியான நிலையிலும் லிங்கன், தன் துணைத்தளபதி ஜெனரல் கிராண்டைக் கொண்டு வெகு திறமையாகச் சமாளித்தான்.

அப்போருக்கு விட்மனின் சகோதரன் ஜார்ஜும் படையில் சேர்ந்து சென்றிருந்தான். ஆனல் 1862-ல் 'பிறடெரிக் பர்க்' என்னுமிடத்தில் காயமடைந்தான். எனவே சகோதரனின் உதவிக்காக விட்மன் நேரில் அங்கு சென்றான்.

அங்கிருந்த நிலையைக் கண்டு உளம் வெதும்பினன். கால் இழந்தவர்களும் கைபோனவர்களும், கண் குருடானவர்களும் உயிருக்கு ஊசலாடுபவர்களும் நிறைந்த அவ்விடத்தைக் கண்டு அவன் மனம் கொதித்தது. படுகாயத்திற்குள்ளாகிப் பரிதவிப்பவர்களை யெல்லாம் பார்த்த அவனும் அவர்களோடேயே ஐக்கியமாகி அவர்களுக்கு ஓயாது உதவி புரிந்தான். மனிதாபிமானத்தைக் காக்கப் போரிட்ட அவர்களுக்கு உதவி புரிவது, தான் செய்யும் சேவை என்று கருதித் தளராது பணி புரிந்தான். அத்துடனின்றிச் சில பல நேரங்களிலே தன் சொந்த பணத்தையும் அவர்களுக்காகச் செலவிடவும் செய்தான்.

இங்ஙனம் ஓயாது, ஒழியாது உழைத்த அவன் உடல் தளர நோயாளியானன். போர்க்களத்திலேயே அவன் நாட்களைக் கழித்ததாலும் போதிய வருவாய் இன்றி கையிலிருந்த கொஞ்சம் பணத்தையும் அங்குசெலவிட்டதாலும் அவனை நோயோடு வறுமையும் வளைத்துக் கொண்டு வேதனைப் படுத்தியது.

எனவே நண்பர்களின் உதவியால் 'இந்தியன் பீரோ' என்னும் அலுவலகத்தில் வேலைக் கமர்ந்தான். ஆனல் அங்கேயும் 'புல்லின் இதழ்களின்' ஆசிரியன் என்றறிந்ததால் வெளியேற்றப் பட்டான். எனினும் லிங்கனின் உதவியால் 'அட்டோர்னி ஜெனரல்' அலுவலகத்தில் ஒரு வேலை கிடைத்தது. அங்கு விட்மனுக்கு வேண்டிய அளவு ஓய்வு கிடைத்தது. அதனல் மேலும் நிறைய கவிதைகள் எழுதி வெளியிட்டான், 'புல்லின் இதழ்கள்' மறுபதிப்பு ஒன்றும் வெளியிட்டான். 1871-ல் 'ஜனநாயகக் காட்சிகள்' (Democratic Vistas) என்ற அருமையான நூலையும் உருவாக்கிப் பதிப்பித்தான்.

ஆனல் அவ்வமைதியையும் ஆர்வத்தையும் பிடுங்கிக்கொண்டு 'பக்கவாதத்

நான் உலகப் பொருள்களையே கவிதைகளாக்குகிறேன்— ஏனெனில் அவையே எனக்கு மேலான ஆத்மீகக் கவிகள் !

தை (Paralysis) கொடுத்து மகிழ்ந்தது 1873-ம் ஆண்டு.

வாலிபத்தை இழந்து முதுமையை முற்றுகையிட்டுக் கொண்டிருந்த அவனுக்கு இது பெரும் வேதனையைக் கொடுத்தது. எனவே ஓன்னரை ஆண்டு ஓய்வு எடுத்துக் கொண்டு'காட்டனில் இருந்த தன் தாயிடம் சென்றான். அங்கும் அவனுக்கு இடி மேல் இடிதான் விழுந்தது. அவன் வந்த சில நாட்களில் அவன் அன்னை மறைந்தாள் அந்த சோகத்தை அவன் மறக்கும் முன்பே அவன் செய்து வந்த அரசினர் வேலையும் போயிற்று. ஆகவே இதுவரை சற்று ஒதுங்கியிருந்தவறுமை இப்போது ஓடிவந்து தழுவிக்கொண்டு உறுத்த ஆரம்பித்தது.

ஆனல் இச்சமயத்தில் இங்கிலாந்தில் புல்லின் இதழ்களுக்குப் பெருமை ஏற்படத் துவங்கியது. இங்கிலாந்துப் பத்திரிகைகள் மட்டுமின்றி, அறிஞர்களும் போற்றிப் புகழ்ந்தனர். அந்நியர்களிடையே மதிப்புப்பெற்ற தம் கவிஞனை இப்போதுதான் அமெரிக்கர்உணரலாயினர். நோயாலும் வறுமையாலும் வருந்தும் விட்மனுக்கு கொஞ்சம் பணமும் ஒரு குதிரை வண்டியும் கொடுத்துப் பெருமைப் படுத்தினர்.

இந்த நேரத்தில் 'ஆன் ஜில்க்ரிஸ்ட்' என்ற இங்கிலாந்துச் சீமாட்டியை விட்மனின் கவிதைகள் கவர்ந்தன. அதனல் அவள் விட்மனைப் பாராட்டி ஒருகடிதம் எழுதினள். அக்கடிதத்தை ரசித்த விட்மன் அவளுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதினன். இப்படியே அவர்களிடையில் ஆசிரிய—வாசக நட்பு விரிந்தது.

1876-ல் விட்மன் நோயால் வருந்துவதாகச் செய்தியறிந்த 'ஜில்க்ரிஸ்ட்' அமெரிக்காவிற்கு வந்தாள். ஏற்கனவே மணமாகிக் குழந்தை குட்டிகளுடைய அவள் 'பிலடெல்பியா'வில் ஒருவீடமர்த்திக் கொண்டு விட்மனை வந்து கண்டு அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தாள். விட்மனின் நிலை கண்ட அவள் அவனுக்காக மிகவும் இரங்கினள், தனக்கு மணமாகாமல் இருந்தால், விட்மனையே மணந்து கொண்டு அவனுக்குச் சேவை செய்வதையே தன் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு மகிழ்ந்து வாழ்வேன், என்று அவள் கூறினள் என்றால் எத்தனை அன்பு அவன் மீது அவளுக்கு இருக்க வேண்டும்! எனினும் பலநாள் அவனருகிலேயே இருந்தபடி அவனுக்குப் பணிவிடை செய்தாள். அதனல் அவன் உடம்பும் ஓரளவு தேறிக் குணமானது பிறகுதான் அவள் இங்கிலாந்திற்குச் சென்றாள்.

1873-ல் பற்றிய நோய் விட்மனை முழுதும் விடவில்லை எனினும் ஓரளவு குணமானதினல் தன்னருமைத் தம்பியோடு காட்மனிலேயே அமைதியாக நாட்களை விரட்டினன். இயற்கையின் அணைப்பிலே ஏறத்தாழ இருபதாண்டுகள் அதன் பிறகு வாழ்ந்த அவன் தன் இறுதி நாட்களை மரணத்தைப்பற்றியே கவிபாடுவதில் கழித்தான். என்றாலும் அவன் வேறு கவிதைகளும் நூல்களும் இயற்றாமல் விடவில்லை. 'இந்திய வழி' (Passage to India) 'இரண்டு ஓடைகள்' (Two Rivulets) என்ற அருமையான கவிதைகளையும் சேர்த்துப் 'புல்லின் இதழ்கள்' புதிய பதிப்பு ஒன்றையும் வெளியிட்டான்.

அதனுல் 300 பவுனும் கிடைத்தது. தள்ளாமையினல் தளர்வடைந்து வந்த அவனுக்கு இதுபெரும் பொக்கிஷமாகத் தான் தோன்றியதாம். நோயின் தொல்லையிலும், உறுதி தளராது உற்சாகத்தோடு வாழ்க்கையை அமைதியாகக் கழித்துக் கொண்டுவந்த அவன் 73வது வயதில் 27—3—1892-ல் இயற்கையின் வழியிலே தன்னையும் ஒப்படைத்து விட்டு மறைந்தான்.

பரம்பரை பரம்பரையாகப் பழமைப் பாணியிலே சென்று வந்த இலக்கியத்திற்கு ஒரு புதிய பாதை வகுத்துத் தந்த அந்நாவலன் மறைந்துவிட்டான். ஆனல் அப்புரட்சிக் கவிஞனின் புகழ் மட்டுமல்ல, அவன் ஆக்கித்தந்த அழியாத இலக்கியங்கள்—அருமையான அறிவுரைகள்—மறையாத எண்ணங்கள் இன்று மட்டுமல்ல என்றுமே ஒளிவிட்டு பிரகாசிக்கும்.

"நீ செய்யவேண்டியது இதுதான்— உலகம், சூரியன், விலங்குகள், இவற்றை நேசி பணத்தை வெறுத்திடு: கேட்போருக்கு உதவு மடையர்களுக்கும், பித்தர்களுக்கும் துணை நில்: உன் உழைப்பையும் வருவாயையும் மற்றவர்களுக்கும் கொடு: கொடுங்கோலர்களை வெறு; ஆண்டவனைப்பற்றி வாதிடாதே மக்களிடம் அன்பாகவும், ஆதரவாகவும் நட; தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் தனி ஒருவனுக்கு கூட்டத்திற்கு-எவருக்குமே தலைவணங்காதே; செல்வாக்குள்ள கல்வியறிவில்லாதவர்கள், இளைஞர்கள், குடும்பத்தாய்மார்கள், முதலிடவர்களோடு தாராளமாகச் செல்!"

(ஜனநாயக் காட்சிகள்)

(முடிந்தது)

—சிந்தனைச் செல்வன்

கைத்தறி ஆடையையே அணியுங்கள்

மார்ஷல் புல்கானின் வருகை!

ஆ. மீ. அலிசேக் மன்சூர்

சோவியத் பிரதமர் புல்கானின், மாரிகாலத்தில் இந்தியாவுக்கு வரவிருக்கும் செய்தி கேட்டு உண்மையிலேயே உள்ளம் மகிழ்கிறோம். ரஷ்ய நாட்டு அழைப்பின்மீது ரஷ்யா சென்ற பண்டித நேரு, உலக அரசியல் சம்பிரதாயத்தை ஒட்டி, சோவியத் பிரதமரும் இந்திய நாட்டுக்கு வருகை தரவேண்டுமென்று விரும்பியிருக்கிறார்: அவரும் ஒப்புதல் தெரிவித்துள்ளார்.

புல்கானின் இந்தியா வருகிறாரென்றால் ரஷ்ய நாட்டு வரலாற்றிலே, ஓர் வியக்கத்தக்க மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்றுதான் அதன் பொருளாகும்! அப்படி என்ன வியக்கத்தக்க மாற்றம் ஏற்படப்போகின்றது என்ற கேள்வி பொதுமக்களுக்கும் குறிப்பாக பொதுவுடமை நண்பர்களுக்கும் ஏற்படலாம். புல்கானின் இந்தியாவுக்கு வருவதானது இதுவரை. ரஷ்ய நாட்டுத் தலைவர்கள்—குறிப்பாக ஸ்டாலின் கடைப்பிடித்து வந்த ஓர் விசித்திரமான கொள்கைக்கு, முற்றுப்புள்ளி வைக்கின்றது என்பதுதான் நாம் மேலே குறிப்பிட்டிருக்கும் வியக்கத்தக்க மாற்றமாகும்!

இங்குள்ள கம்யூனிஸ்டுகளைக் கேட்டுப் பார்த்தால். மூச்சுவிடாமல் பேசுவார்கள்; கம்யூனிஸ்டுகளுக்கு அதிலும் ரஷ்யத் தலைவர்களுக்கு அகில உலகமே தெரியும். —அகில உலக சரித்திரத்தை. பூகோளத்தை, விஞ்ஞானத்தை கணித சாத்திரத்தை, எல்லாவற்றையுமே கரைத்துக் குடித்திருக்கிறார்கள் என்று பெருமையாகக் கூறுவார்கள். அகில உலக அரசியலும் அவர்களுக்கு எந்த அளவில் தெரியும்— அல்லது தெரியுமா தெரியாதா என்பது பற்றி நுணுகி ஆராய வேண்டியது இப்போது நமக்கு தேவையற்றதாய் இருந்தாலுங்கூட, **அகில உலகத்தைச் சுற்றுவதற்கு வாய்ப்பும் வசதியுமுள்ள அத்தலைவர்கள், அதனைச் செய்தார்களா என்ற கேள்வியையேனும் நாம் கேட்டுத்தான் பார்க்க வேண்டும்.**

அதிலும் ரஷ்யத் தலைவர்கள், வெளிநாடுகளுக்கு மற்ற நாட்டுத் தலைவர்கள்போல் சென்றதுண்டா? கம்யூனிஸ அகிலத்தில் அங்கம் வகிக்கும் பொதுவுடமை நாடுகளைத் தவிர, கம்யூனிஸ்டல்லாத மற்ற நாடுகளுக்கு அவர்கள் சென்றதுண்டா? வாய்ப்பு, வசதி அழைப்பு எல்லாமிருந்தும் ஸ்டாலின் அந்த கைங்கரியத்தை ஏன் தன் வாழ்நாட்களில் செய்துகாட்டாமல் மறைந்தார்? இத்தனை கேள்விகளையும் நாம் சற்று நுணுகி ஆராய்ந்து பார்த்தால் மார்ஷல் புல்கானின் அவர்களது இந்திய விஜயம் ரஷ்யத் தலைவர்களின் வரலாற்றிலே, உண்மையிலேயே ஓர் வியக்கத்தக்க மாற்றத்தைத்தான் உண்டுபண்ணியுள்ளது என்பது தெள்ளத் தெளிவாக புலனாகும். ஸ்டாலின் பரம்பரைக்கு, அத்தகைய மாசு வேண்டாம் என்று எண்ணிய புல்கானினை நம்மால் பாராட்டத்தான் வேண்டும்.

ரஷ்ய நாட்டைக் காண்பதற்காக, வெளிபுலகிலிருந்து, எத்தனை தூது கோஷ்டிகள்—கலைக் கழகங்கள் — நடிகர்கள் — விஞ்ஞான வல்லுனர்கள்-விளையாட்டு வீரர்கள்—தனிப்பட்ட முக்கியஸ்தர்கள்—இப்படி எத்தனை பேர் சென்றார்கள்! ஸ்டாலினைக் கண்டதுண்டா என்று அவர்களைக் கேட்டுப் பாருங்கள்! ரஷ்யாவுக்குச் சென்றிருந்த சமயத்தில் ஸ்டாலினைக் காண்பதற்காகச் செய்த முயற்சிகள் என்னவாயின என்பதையும் கேட்டுப் பாருங்கள், **மண்டை வலிக்கும், வயிற்றுக் கோளாருக்கும், மாஸ்கோவைத் தவிர, வேறு எங்குமே மருந்து கிடையாது என்று "தத்துவம்" கற்பித்துக் கொண்டு, நோயாளிகளாக, மாஸ்கோவுக்குச் சென்ற, இங்குள்ள கம்யூனிஸ்டு பிரமுகர்களையே கேட்டுப் பாருங்கள், ஸ்டாலினைக் கண்டதுண்டா என்று! "ஆகா—பார்த்திருக்கிறோமே படத்திலே!" என்பதைத் தவிர, வேறு என்னதான் பதில் சொல்ல முடியும்?** அப்படியே ஸ்டாலின் யாராவது, வெளிநாட்டுப் பிரமுகருக்கு, பேட்டி அளிப்பதாக இருந்தால், அது மிகமிக அபூர்வமானதாகவே இருக்கும்; இப்படி நாம் எழுதும்போது. 'ஆகா, என்ன கொடுமை—கொடுமையிலும் கொடுமை, ரஷ்ய நாட்டையே இந்த கழகத்தார் எதிர்க்க ஆரம்பித்துவிட்டார்களே' என்று குருட்டாம் போக்கில் சர்வதேச பஜனையைப் பாட ஆரம்பித்தால், அதைப்பற்றி நாம் கவலைப்படவும் தயாராக இல்லை; ஸ்டாலினையோ, அல்லது ரஷ்ய நாட்டின் தனித் தன்மையையோ, அகில உலக அரங்கத்தில் அது கொண்டிருக்கும் தனி மறைபையோ நாம் குறைத்து மதிப்பிட ஆசைப்படவில்லை; அதே சமயத்தில், மேலே குறிப்பிட்டது போன்ற குறைகளிருந்தால், அதனைச் சுட்டிக் காட்டத் தயங்கப் போவதில்லை!

புல்கானின் அவர்களது இந்திய விஜயத்தினது முக்கியத்துவத்தை, நாம் உணர வேண்டுமென்றால், மேலே குறிப்பிட்டது போன்ற காலஞ் சென்ற ஸ்டாலின்பற்றிய விளக்கம் நிச்சயமாகத் தேவைப்படுகின்றது; பாலைவனத்திலே, சோலைவனத்தைக் கண்ட ரஷ்ய நாட்டு மக்களின் தந்தை என்ற அளவிலே, நாமும், புல்கானினை வருக, வருக, என வரவேற்கக் கடமைப் பட்டுள்ளோம்.

கோயங்காவின் ஆங்கில தினசரி கூட, புல்கானினை வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்து, தலையங்கம் தீட்டியிருக்கிறது; அந்த தலையங்கத்தில் காணப்படும் மகிழ்ச்சி, **புல்கானின் இந்தியாவுக்கு வருகிறார் என்பதற்காக அல்ல! இந்திய நாட்டின் சாதனைகளையும்—மாடல் சோஷலிஸத்தின் அடிப்படைகளையும் — வினோபாபாவேயின் பூதான இயக்கத்தின் சேவைகளையும் காணக்கூடிய வாய்ப்பைப் புல்கானின் பெறுவார் என்பதற்காகத்தான் அவ்வளவு மகிழ்ச்சியோடு, அது தலையங்கம் தீட்டியிருக்கிறது! இந்தியா**வின் சாதனைகளைக் காண்பார் அவர் என்று எழுதினாலாவது அதில் கொஞ்சம் பொருள் உண்டு என்று நாம் கருதலாம். ஆவடிக் கூத்தையும்—வினோபாஜியின் கால்நடை யாத்திரையையும் சந்திக்கிழுத்து புல்கானினது வருகையையும் அத்தோடு இணைத்து, நம்மை யெல்லாம் சிரிக்கும்படி வைக்கின்றது அந்த மவுண்ட்ரோடு பெத்த பெருமாள் கோஷ்டிகளின் ஏடு!

சர்வதேச அரசாங்கங்கள், கடைப் பிடிக்கும் பொதுவானதொரு பழக்கம் எல்லோரும் அறிந்ததுதான்; இன்னொரு நாட்டுத் தலைவர், தன் நாட்டுக்கு விஜயம் செய்தால், அத்தலைவர் எங்கெந்த முறையில் நடத்தப்படுகின்றார், எங்கெங்கு, அழைத்துச் செல்லப்படுகின்றார் என்பதுபற்றி அதிக விளக்கம் தேவையில்லைதான்; உலகம் சுற்றும் அரசியல் தலைவர்கள். அந்தந்த நாட்டினது பெரிய பெரிய நகரங்களைத்தான் சுற்றிக் கொண்டிருப்பார்களே தவிர, குக்கிராமங்களைப் போய் கண்டறிந்து, நிலைமைகளை அறிய முடியாத நிலையிலேதான் இருப்பார்கள்; ஏற்பாடும் அந்த முறையிலேதான் செய்யப்பட்டிருக்கும்.

அதேபோல்தான் புல்கானின் இந்தியாவுக்கு வரவிருக்கிறார்; அவர் எங்கெங்கு போவார்—இல்லை—எங்கெங்கு அழைத்துச் செல்லப்படுவதற்கு, இந்திய சர்க்கார் ஏற்பாடு செய்யும் என்பதற்கு "பெரிய ஆராய்ச்சி" ஒன்றும் தேவையில்லை; அதனை இப்போதே நம்மால் கூறமுடியும்!

புல்கானின் வருவார்; விமான நிலையத்திலே பிரமாதமான வரவேற்பளிக்க, நமது இந்தியாவின் முடிசூடா மன்னர்(?) ஏற்பாடு செய்வார்; புல்கானின் பவனிவரக் கூடிய வீதிகளிலே, தோரணங்கள் கட்டி, வளைவுகள் உண்டாக்கி, 'தடபுடல்' செய்திருப்பார்; இதுமட்டுமா? புல்கானின் ஊர்வலம் வரும் வீதிகளிலே, பிச்சைக்காரர்கள்—நோயாளிகள்—பிளாட்பாரம் ஆத்மாக்கள்—ஒருவர் கூட இல்லாமல் விரட்டியடிப்பதற்கும் ஏற்பாடு செய்வார்!

புல்கானின் எங்கெங்கு செல்வார்? டெல்லியைச் சுற்றுவார். முகலாய மன்னர்களின் அழியாக் கட்டிடங்களையும்—மசூதிகளையும் காண்பார், ஆக்ராவுக்குச் சென்று தாஜ்மகாலைத் தரிசிப்பார். காந்தியடிகளின் சமாதியைக் காண்பார்! பம்பாய் செல்வார். கல்கத்தாவைக் காண்பார். நேரு பண்டிதர் மனம் வைத்தால் சென்னைக்கும் புல்கானின் வரலாம். பக்ரா நங்கல் அணைக்கட்டுத் திட்டத்தைக் காட்டுவார்கள். சிந்திரி உர உற்பத்திச் சாலையையும் காட்டுவார்கள். சித்தரஞ்சன் இயந்திர சாதனங்களை விளக்குவார்கள்! **புல்கானின் இந்தியாவுக்கு வந்தால் இந்திய சர்க்கார் இந்த முறையிலேதான் ஏற்பாடுகளை செய்யும்,**

இவ்வளவு காட்சிகளையும் கண்டு விட்டு 'இந்தியா மிகவும் நன்றாக இருக்கிறது. நேருவின் சாதனைகள் பலே ஜோர். இந்தியர்கள் சமாதானத்தை பெரிதும் விரும்புகின்றனர்!' என்று கடைசியாக பிரயாணத்தை முடித்துவிட்டு விமான தளத்திலே நின்று கொண்டு வணக்கம் சொல்லி விடை பெறுவார். இதுவும் நமக்குத் தெரிந்ததுதான்.

ஆனால் ரஷ்யப் பிரதமர் புல்கானின் பார்க்கத் தவறும் காட்சிகள் ஏராளமிருக்கும். நகர சுத்தித் தொழிலாளர்களின் காலனிகள் நேருசர்க்காரின் நிர்வாகத்தின் கீழ் எந்த லட்சணத்தில் இருக்கிறது என்பதை புல்கானினால் காணமுடியாது. தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் ஆயிரமாயிரம் கிராமங்களில் ஒன்றைக்கூட எட்டிப் பார்க்கவைக்க மாட்டார். இந்த முறையிலே புல்கானின் இழந்துவிடும் காட்சிகள் ஏராளமிருக்கலாம்.

சமாதான முறையிலே 'மாதிரி சோஷலிஸம் செய்துகாட்டும் அபிவிருத்திகளை புல்கானின் காண்பாராம்! வினோபாஜீயின் பூதான இயக்கச் சேவைகளையும் காண்பாராம்! 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு இப்படித்தான் ஆசைப்படுகிறது! இதைவிட வெட்கக்கேடு வேறு ஒன்றுமே இருக்கமுடியாது. கால்நடையாக நடந்து சென்று ஒவ்வொரு நிலப் பிரபுவையும் கெஞ்சிக் கூத்தாடி, ஒன்றுக்குமுதவாத **தரிசு நிலத்திலே** ஒரு சில ஏக்கர்களை பெற்று அவைகளை ஏழைகளுக்கு பகிர்ந்து கொடுத்து பொருளாதார சிக்கலை எங்கள் வினோபாஜீ தீர்த்துக் கட்டப் போகிறார் என்பதை புல்கானின் கேட்டால் விழுந்து விழுந்து சிரிக்காமல் வேறு என்னதான் செய்வார்?

கம்யூனிஸ்ட் தோழர்கள் கூறுகிறபடி புல்கானின் இந்தியாவின் 'பண முதலைகளைப் பற்றி முழுவதும் அறிந்திராவிட்டாலும், ஓரளவாவது புரிந்துதானிருப்பார். டாடாவை அறிவார். பிர்லாவைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பார். இந்தியாவுக்கு அவர் வருகை தரும்பொழுது இந்த முதலாளிகளைப் பற்றி அவர் மேலும் தெரிந்து கொள்ள ஆசைப்பட வேண்டும். அவர் ஓர் உண்மையான பொதுவுடமை வாதியாக இருந்தால் இதனைத் தவறாமல் செய்தாக வேண்டும். இந்தக் காரியத்தை அவர் செய்யும்பொழுது இந்திய சர்க்காரின் ஓராண்டு வருமானத்தை விட அதிகமான வருமானம், இந்திய முதலாளிகளுக்குக் கிடைக்கின்றது என்பதை அறிந்து மூக்கின்மேல் விரல் வைப்பார். மாடல் சோஷலிஸத்தைக் கண்டு எள்ளி நகையாடுவார், வினோபாஜீயின் இயக்க விசித்திரத்தையும் அறிவார். அத்தோடு நின்றுவிட மாட்டார்? இத்தகைய பெரிய பணமுதலை துவக்கப்போகும் இயந்திரத் தொழில் கருவி உற்பத்திச்சாலைக்குத் தேவைப்படும் இயந்திர சாதனங்களை கொடுத்துதவ, தனது

11-ம் பக்கம்

வல்லூறு வானம்பாடியாக ...

கலை வானத்திலே வல்லூறு ஒன்று வட்டமிடுகிறது. பிணங்கள் எங்கெல்லாம் குவிந்திருக்கிறதோ, அங்கெல்லாம் புயல்வேகப் பாய்ச்சல் நடத்தி அழிந்துவரும் திரை வையத்தை 'புனருத்தாரணம்' செய்யப் போகிறதாம், இந்த கருடன்! 'தூரத்துப் பார்வை' என்ற தலைப்பிலே நல்லறிவாளர் பலரின் புகழ் மெருகிலே சேற்றை வாரி யிறைத்து வல்லமை காட்டுகிறது! முட்டாள்கள் மலிந்த நாடுதானே என்ற துணிவு கோழைகளைக்கூட 'வீரமுரசு' கொட்ட வைப்பதில் விந்தையில்லை!

'அரசியலையும் கலையையும் ஒன்ருக்கி குழப்புகிறீர்கள்!' என்பது பழமையின் கருச்சிதைவில் பிறந்த சில்லரைகளின் கூக்குரல்...அறிவு வளர்ந்துவிட்ட இன்னளில் இந்த தத்துவார்த்தத்தை பேசி அரங்கமேறும் அப்பாவிகளைப்பற்றி என்ன எண்ணுவது! இருட்டைத் தின்று ஆர்ப்பரிக்கும் இவர்கள் நல்ல பணியால் நாட்டின் கண்ணின் மணியாகி விட்டவர்களை சாக்கடை மொழியால் வாழ்த்தும் விபரீதம் எத்தனை விசித்திரமானது!

வளரும் செல்வாக்கினுல் ஏற்பட்ட வயிற்றெரிச்சலை வசைபாடி போக்கிட என்னும் வர்க்கத்தினர் நமக்கு புதியவர்களல்ல அரசியலிலே ஆயிரமாயிரம் எதிர்ப்புகளை மிதித்து வந்தவர்கள் நாம்...கலையுலகிலே நமது பணி வாழ்த்தப்படுவது சிலருக்கு ஏனே பிடிக்கவில்லை. தூற்றுவதையே தொழிலாகக் கொண்ட இவர்கள் 'போருக்கு வா!' என்று தோள் தட்டுகிறார்கள்!

திரையுலகிலே 'வெள்ளை யடிக்கப் போவதாக வீராப்பு பேசி சென்னையிலிருந்து வெளிவருகிறது ஒரு இதழ் !

"கலையுலகில் திராவிடமா!" என கச்சைக்கட்டி களம் அமைத்து அழைக்கிறது, இந்த சினிமாப் பத்திரிகை! கலைக்கும் கருத்துக்குமுள்ள 'பந்தத்துவம்' அறிவு தரித்திரர்களுக்கு புரியவா போகிறது! விளக்கம் ஆயிரம் தந்தாலும் பயனில்லையே! பழுதான விழி படைத்தோர் காணும் காட்சியிலே களங்கம் இருக்கத்தானே செய்யும்! நாடு போற்றும் அறிஞரை வசைமொழியால் தாக்கி எழுதுகிறது இந்த பூஜயம். அந்த வசை அகற்ற மாறு ஆறுதல் தருவதில் நமக்குத் தடையில்லை ஆனுல் பிழைப்பு நடத்த எண்ணற்ற வழிகள் இருக்கும் போது இந்த கடை புத்தி எதற்கோ?

கலைக்கு இவர்கள் சீமந்த புதல்வர்களோ, என்னவோ! மாற்று கருத்தின் இச்சகம் பேசி பிழைக்கவில்லை! புதிய கருத்துக்களை நாடு வாழ்த்துகிறது... கலைத் துறையிலும் அத்தகையோருக்கு வரவேற்பு இருப்பதில் அதிசயமில்லை! அரைகுறைகளின் கூக்குரல் நம்மை கவிழ்த்தி விடவாப் போகிறது? ஓகோ! என்று அந்த நாளில் ஆர்ப்பரித்த 'பேசும் படம்' கூட இப்போது எவ்வளவோ நல்லபிள்ளையாக மாறிவிட்டபோது நேற்றைய ஈரத்தில் துளிர்த்த காளான் ஒய்யாரம் கொட்டுகிறது.

அறிவியக்கத்தில் தொடர்பு கொண்ட எழுத்தாளர்கள் என்றாலே இந்த 'சினிமாப் பத்திரிகை ஆசிரியருக்கு ரத்தக் கொதிப்பு' வந்துவிடும். சமுகாகி தூரத்துப் பார்வையிலே குப்பையைக் கிளறுவது இவரது திருப்பணி. என்ன செய்வது? சகிக்க முடியவில்லையே! பாடிய வசையெல்லாம் வளர்ச்சிக்கு எருவாகி விடுகிறதே; என்ற சஞ்சலம் மனதை அரிக்க நாற்ற நடையிலே மொழியை வாரித் தெளிப்பதில் ஏனே ஒரு திருப்தி—களிப்பு!

அந்த ஏட்டின் சமீப இதழில் டைரக்டர் ஏ. எஸ் ஏ சாமி சிக்கியிருக்கிறார். ஏதேனும் ஒன்று வேண்டுமே! திரையுலக சீர்திருத்தமல்லவா! சமான்யமா, என்ன?

வேத சிரோமணிகள், பண்டித பெருமக்கள், மார்க்க ஞானிகள், சாவிடணிந்தோர்.. இத்தகு ஒரு பட்டாளமே தோல்வியால் முகாரி பாடும் வேளையில், இந்த கலைத்தோட்டத்து வெட்டுக்கிளி' அறிவியக்கத்தை வீழ்த்திவிடப் போகிறதாம்! புயலே அடங்கிவிட்ட பின் சருகு சண்டப்பிரசண்டம் முழக்குகிறது! விசித்திரம்! விசித்திரம்!

சண்டவாறு தூற்றும் அந்த கலை இதழுக்கு ஒன்று சொல்வோம் :

நாடு முன்போல இருளில் அமிழ்ந்திருக்கவில்லை. 'விளம்பரந் தேடிகள்' வெளிச்சமிடுவதை மக்கள் புரிந்து கொள்வார்கள்! புகழ் பெற்ற சிலரை ஏசிப் பேசி நடத்தும் பிழைப்பிற்கும் எல்லையுண்டு. அதை யாகிலும் அளவு மீருமல் காபாற்றிக் கொள்ளும் சாதாரண அறிவாவது பெற முனையட்டும் என்பதே நமது எடுத்துக்காட்டாகும்.

கலையுலகிலே வெட்டுக்கிளிகள் தேவையில்லை. வல்லூறு வானம்பாடியாக வேண்டுமென்பதே நமது எண்ணம்.

பெயர் சூட்டுப் படலம் !

ஸ்ரீமதி பிக்சர்ஸார் கோவையில் சமூகப்படம் ஒன்றை தயாரித்தனர். நண்டர் சக்தி கிருஷ்ணசாமி இதற்கு வசனம் அமைத்தார் சகோதர பாசத்தை விளக்கும் குடும்பச் சித்திரம் இது. கதையை கவனிக்காத நமது படாதிபதிகள் பெயர் சூட்டுவதை மட்டும் பெரிய பிரச்னையாக வளர்த்திருக்கிறார்கள்!

'தம்பி என் தெய்வம்' என்பது இதன் முதல் நாமதேயம்! பிறகு 'அண்ணு'வாக அதனை மாற்றினர். அரசியல் தலைவரை இது குறிப்பதாகஎண்ணி மூன்றாவதாக 'அருமை அண்ணு ஆசைத் தம்பி' என்ற பெயரை அறிவித்தனர். பத்திரிகைகளில் விளம்பரமும் வந்தது. இப்படி எண்ணற்ற அவதாரங்கள்...

புகழ்பெற்ற 'நம்ம' சென்ஸார் போர்டாரின் மகத்துவத்தை சொல்லவா வேண்டும்! இடை அசைவையும் உடை நெகிழ்வையும் பார்த்து ரசித்து விட்டு வசனங்களை அளவெடுக்கும் மேதைகள் நிறைந்த திருச்சபையல்லவா அது! 'அருமை அண்ணு' இந்தப் பெயரில் 'என்னவெல்லாமோ' இருப்பதாக நினைத்துக்கொண்டு படத்தின் பெயரையே அனுமதிக்க மறுத்து விட்டார்களாம்! திரையில் ஒலிக்கும் அண்ணு, தம்பி, ஆகிய சொற்களில் கூட சத்தரிக்கோல் விழுமோ என்னமோ! விசித்திர சித்தர்கள்! பெயரைக் கேட்டே அஞ்சுகிறார்கள்.

ஓய்ந்துபோன படத் தயாரிப்பாளர் இறுதியாக வேறொரு பெயரை வைத்திருக்கிறார்...

இன்ப முடிவாம்!

—சேரன் தம்பி

*

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனுக்கு

தெ. இ. நடிகர் சங்கம்

பாராட்டுவிழா நடத்த ஏற்பாடு

'அவ்வை' டி. கே. சண்முகத்தின் முயற்சி

தென்இந்திய நடிகர் சங்க கட்டிட நிதிக்காக ஆகஸ்டு திங்களில் நடைபெற யிருக்கும் கலைவிழாவின் போது, கலைத்துறையில் நகைச்சுவை மன்னர் என். எஸ் கிருஷ்ணன் அவர்கள் இதுவரை செய்துள்ள மகத்தான சேவையைப் பாராட்டும் முறையில் அவருக்குப் பொன்னுடை போர்த்துவதென்று அண்மையில் நடைபெற்ற தெ. இ. நடிகர் சங்க செயற்குழுவில் முடிவு செயயப்பட்டிருக்கிறது.

பொன்னுடை போர்த்துவதற்கான எல்லா செலவுகளையும் தாமே ஏற்றுக் கொள்வதாக 'அவ்வை' டி. கே. சண்முகம் அவர்கள் ஒப்புக் கொண்டாராம்.

*

வடநாட்டு நடிகை பறக்கிறார் !

வடநாட்டின் பிரசித்திப்பெற்ற சினிமா நடிகை தோழியர் நர்கிஸ் இனி பிரதி மாதமும் பம்பாயில் 15 நாட்களும், சென்னையில் 15 நாட்களுமாக தங்கியிருந்து படத்தொழிலில் தாம் ஒப்பந்தம் செய்துள்ள பணியைப் பூர்த்தி செய்ய திட்டமிட்டிருக்கிறாராம்! அந்த அளவுக்கு வடநாட்டு நட்சத்திரம் நர்கிசுக்கும் மற்றும் பல நடிகர்களுக்கும் சென்னை ஸ்டுடியோக்களில் "யோகம்" வளர்ந்து வருகிறதாம்!

மு. புரட்சிமணி—சரசுவதி

மீர்சாகிப்பேட்டை, அழகிரி நாடக மன்றத்தாரின்

"அத்தான்"

சமூக நாடகம்

9-7-55 சனிக்கிழமை மாலை 6-மணிக்கு
எழும்பூர் மியூசியம் தியேட்டரில்

கதை வசனம்; எஸ். எஸ். தென்னரசு — பயிற்சி : எ. தன்ராஜ்
பாடல்கள் : கவிஞர் கண்ணதாசன், பூவை. செங்குட்டுவன், இரா. சாரங்கராசன் — இசையமைப்பு : இரா. சாரங்கராசன்
பின்னணி இசைக்குழு: ஆர். கே. சேகர் குழுவினர்

நடிகர்கள் : திருநாவு, டி. ஏ. வெங்கடாசலம், மு. புரட்சிமணி, சாரங்கன், வி. கன்னியப்பன், பெருமாள், சி. ஆர். பழனி, டி. ஞானசேகரன், ஈ மணி, உமார், வி. ராமச்சந்திரன், லோகநாதன், எத்திராசன் இராசாபாதர்.
நடிகைகள் : மனோகரி, வி. சரசுவதி, ஆர். ஆண்டாள், ஜெயலட்சுமி,

கட்டணம் : ரூ. 2, 1, அணு 8. — வி: கன்னியப்பன், அமைப்பாளர்

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர், என். வி. நடராசன், செழுமு அச்சகம் 15, [illegible] சென்னை-1.